HISTORY

India and the Contemporary World - I

இந்தியா மற்றும் சமகால உலகம் - I

SEMESTER - 1

AP SCERT

Contents

Section I:	**Events and Processes** நிகழ்வுகளும் செயல்முறைகளும்		
Chapter - 1	The French Revolution பிரெஞ்சு புரட்சி	June ஜூன்	62
Chapter - 2	Socialism in Europe and the Russian Revolution ஐரோப்பாவில் சோஷியலிஸம் மற்றும் ரஷ்ய புரட்சி	August ஆகஸ்ட்	106

B8Y6D4

Student Corner

K5M5R3

Teacher Corner

LEARNING OUT COMES

The Students will be able to

I. The French Revolution

1. Describe the French society during the late 18th century
2. Explain the reign of terror.
3. Compare the French revolution with the other revolutions and appreciate the role of women in the French revolution.
4. Locate France, England, Germany and other countries on the world map.
5. Evaluate the practice of slavery and explain how it was abolished.
6. Explain the role of political symbols and collect the political symbols of french revolution.

2. Socialism in Europe and the Russian Revolution

1. Understand the age of social change in Russia
2. Describe about the Russian Empire in 1914, Russian economy and society.
3. Compare and contrast February and October revolutions with French revolution.
4. Collect the pictures of civil war and prepare a wall poster on it.
5. Outline the global influence of the Russian revolution and the USSR.
6. Identify the roles played by different great personalities and their influence on the revolution.

AP-SCERT

கற்றல் விளைவுகள்

மாணவர்கள்....

1. பிரெஞ்சு புரட்சி

1. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரஞ்சு சமுதாயம் குறித்து விவரிப்பர்.
2. வன்முறை ஆட்ச்சிகாலம் குறித்து விவரிப்பர்.
3. பிரெஞ்சு புரட்சியோடு மற்ற புரட்சிகளை ஒப்பிட்டு, பிரஞ்சு புரட்சியில் பெண்களின் நிலையை குறித்து புகழ்வர்.
4. உலக வரைபடத்தில் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் மற்ற நாடுகளை குறிப்பர்.
5. அடிமை தனத்தை மதிப்பீடு செய்து அது எப்படி ஒழிக்கப்பட்டது என்பதை விவரிப்பர்.
6. அரசியல் சின்னங்களின் பங்கை குறித்து விவரித்து, பிரஞ்சு முரட்சியின் அரசியல் சின்னங்களை சேகரிப்பர்.

2. ஐரோப்பாவில் சோஷியலிஸம் மற்றும் ரஷ்ய புரட்சி

1. ரஷ்யாவில் சமூக மாற்றம் ஏற்பட்ட காலத்தை குறித்து புரிந்துகொள்வர்.
2. 1914 ஆண்டு ரஷ்ய பேரரசு, ரஷ்ய பொருளாதாரம் மற்றும் சமூகம் பற்று விவரிப்பர்.
3. பிப்ரவரி புரட்சி மற்றும் அக்டோபர் புரட்சிகளை பிரஞ்சு புரட்சியுடன் ஒப்பிடுவர்.
4. உள்நாட்டுப் போரின் படங்களை சேகரித்து சுவரொட்டியை தயாரிப்பர்.
5. கரஷ்ய புரட்சி மற்றும் சோவியத் ஒன்றியத்தின் உலகலாவிய செல்வாக்கை கோடிட்டு காட்டுவர்.
6. வெவ்வேறு தரலவர்கள், அவர்கள் ஆற்றிய பங்கு மற்றும் புரட்சியில் அவர்களின் தாக்கத்தை அடையாளம் காண்பர்.

AP SCERT

SECTION I

EVENTS AND PROCESSES

In Section I, you will read about the French Revolution, the Russian Revolution, and the rise of Nazism. In different ways all these events were important in the making of the modern world.

Chapter I is on the French Revolution. Today we often take the ideas of liberty, freedom and equality for granted. But we need to remind ourselves that these ideas also have a history. By looking at the French Revolution you will read a small part of that history. The French Revolution led to the end of monarchy in France. A society based on privileges gave way to a new system of governance. The Declaration of the Rights of Man during the revolution, announced the coming of a new time. The idea that all individuals had rights and could claim equality became part of a new language of politics. These notions of equality and freedom emerged as the central ideas of a new age; but in different countries they were reinterpreted and rethought in many different ways. The anti-colonial movements in India and China, Africa and South America, produced ideas that were innovative and original, but they spoke in a language that gained currency only from the late eighteenth century.

In Chapter II, you will read about the coming of socialism in Europe, and the dramatic events that forced the ruling monarch, Tsar Nicholas II, to give up power. The Russian Revolution sought to change society in a different way. It raised the question of economic equality and the well-being of workers and peasants. The chapter will tell you about the changes that were initiated by the new Soviet government, the problems it faced and the measures it undertook. While Soviet Russia pushed ahead with industrialisation and mechanisation of agriculture, it denied the rights of citizens that were essential to the working of a democratic society. The ideals of socialism,

AP SCERT

பகுதி 1



நிகழ்வுகளும் செயல்முறைகளும்

பகுதி–1 நீங்கள் பிரெஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி மற்றும் நாசிஸத்தின் தோற்றம் குறித்து படிக்கலாம். பல்வேறு வழிமுறைகளில் இவ்வணைத்து நிகழ்வுகளும் புதிய உலகை உருவாக்குவதில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

முதல் அத்தியாயம் பிரெஞ்சுப் புரட்சி பற்றியது. தற்போது நாம் சுயேட்சை, சுதந்திரம் மற்றும் சமத்துவம் போன்ற கருத்துகளை அடிக்கடி கையாள்கிறோம். ஆனால் இக்கருத்துகளுக்கும். ஒரு வரலாறு உண்டு என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டியுள்ளது. பிரெஞ்சுப் புரட்சியைப் பார்க்கும்போது நீங்கள் அவ்வரலாற்றின் சிறு பகுதியைப் படிப்பீர்கள். பிரெஞ்சுப்புரட்சி பிரான்சில் மன்னராட்சி முடிவுக்குவர வழிகோலிற்று. சலுகை அடிப்படையிலான ஒரு சமுதாயம், ஒரு புதிய முறையிலான ஆட்சிக்கு வழிவகுத்தது. புரட்சியின் போது, அறிவிக்கப்பட்ட மனித உரிமைகளின் பிரகடனம் ஒரு நவீன காலம் வரவிருப்பதை அறிவித்தது. அனைத்து தனிமனிதர்களுக்கும் உரிமைகள் உள்ளன என்னும் கருத்து சமத்துவத்தைக் கோரியதால் அது அரசியலில் ஒரு புதிய மொழியின் பாகமானது. சமத்துவம் மற்றும் சுதந்திரம் என்னும் இக்கருத்துகள் நவீன யுகத்தின் மையக்கருத்துகளாக எழுச்சியுற்றன. ஆனால் பல்வேறு நாடுகளில் அவை பல்வேறு வழிமுறைகளில் மீள் விளக்கம் மற்றும் மீள்சிந்தனை செய்யப்பட்டன. இந்தியாவிலும் சீனாவிலும் ஆப்ரிக்காவிலும் தென்அமெரிக்காவிலும் காலனியாதிக்க எதிர்ப்பு இயக்கங்கள் புதுமையான மற்றும் முதல் தரமான சிந்தனைகளைத் தோற்றுவித்தனர். ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னரே அவை முக்கியத்துவம் பெறத் தொடங்கின.

இரண்டாம் அத்தியாயத்தில் ஐரோப்பாவில் பொதுவுடைமைக் கருத்துகளின் வருகையைப் பற்றி பயிலலாம். மேலும் ஆட்சியிலிருந்து மன்னர் இரண்டாம் ஜார் நிக்கோலஸ் எவ்வாறு பதவியைக் கைவிட்டார் மற்றும் அதற்கான நிகழ்வுகள் என்ன என்பதையும் பயிலலாம். ரஷ்யப் புரட்சியானது வேறுபட்ட முறையில் மாற்றத்தை கொண்டுவர முயன்றது. பொருளாதார சமத்துவம் தொழிலாளர்களின் மற்றும் விவசாயிகளின் நலன் போன்ற பிரச்சனைகளை எழுப்பியது. இந்த அத்தியாயம் நவீன சோவியத் அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட மாற்றங்கள் அது எதிர்கொண்ட சிக்கல்கள் மற்றும் அது மேற்கொண்ட மாற்றங்கள் குறித்தும் எடுத்துரைக்கும்.

நிகழ்வுகளும் செயல்முறைகளும்

however, became part of the anti-colonial movements in different countries. Today the Soviet Union has broken up and socialism is in crisis but through the twentieth century it has been a powerful force in the shaping of the contemporary world.

Chapter III will take you to Germany. It will discuss the rise of Hitler and the politics of Nazism. You will read about the children and women in Nazi Germany, about schools and concentration camps. You will see how Nazism denied various minorities a right to live, how it drew upon a long tradition of anti-Jewish feelings to persecute the Jews, and how it waged a relentless battle against democracy and socialism. But the story of Nazism's rise is not only about a few specific events, about massacres and killings. It is about the working of an elaborate and frightening system which operated at different levels. Some in India were impressed with the ideas of Hitler but most watched the rise of Nazism with horror.

The history of the modern world is not simply a story of the unfolding of freedom and democracy. It has also been a story of violence and tyranny, death and destruction.

AP – SCERT

சோவியத் ரஷ்யா தொழில்மயமாக்கல் மற்றும் வேளாண்மையில் இயந்திர மயமாக்கலை முன்னோக்கி தள்ளினாலும் மக்களாட்சி சமுதாய செயல்படுவதற்குத் தேவையான குடிமக்களின் உரிமைகளை அது மறுத்தது. பல்வேறு நாடுகளில் காலனி ஆதிக்க எதிர்ப்பு இயக்கங்களின் பாகமாக பொதுவுடைமைக் கருத்துக்கள் வளர்ச்சியடைந்திருந்தன. தற்போது சோவியத் யூனியன் சிதறி பொதுவுடமைக் கருத்துக்கள் நெருக்கடி நிலையில் இருப்பினும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமகால உலகினை வடிவமைப்பதில் ஆற்றல்மிக்க சக்தியாக இருந்து வந்தது.

மூன்றாம் அத்தியாயம் உங்களை ஜெர்மனிக்கு அழைத்துச் செல்லும். அது ஹிட்லர் மற்றும் நாசிச அரசியலின் தோற்றத்தைப் பற்றி விவாதிக்கும். நாசிஸ ஜெர்மனியில் குழந்தைகள் மற்றும் பெண்களின் நிலை, பள்ளிகள் மற்றும் மையப்படுத்தப்பட்ட இராணுவ முகாம்களைப் பற்றி நீங்கள் படிக்கலாம். பல்வேறு சிறுபான்மையினருக்கு நாசிக்கொள்கை எவ்வாறு வாழும் உரிமையை மறுத்தது என்பதையும் யூதர்களை துன்புறுத்துவதற்கு யூதர் எதிர்ப்பு உணர்வுகளை நீண்டகால பாரம்பரியமாக எவ்வாறு ஏற்படுத்தியது. பொதுவுடைமை மற்றும் மக்களாட்சிக்கு எதிரான ஓய்வில்லாத போரை எவ்வாறு நடத்தியது என்பனவை பற்றியும் நீங்கள் பார்க்கலாம். ஆனால் நாசிக் கொள்கையின் எழுச்சி என்பது படுகொலைகள் மற்றும் கொலைகள் பற்றிய ஒரு சில நிகழ்வுகளைக் குறித்தது மட்டமல்ல. அது பல்வேறு நிலைகளில் செயல்பட்ட விரிவான மற்றும் அச்சுறுத்தலான பணி முறையைப் பற்றியது. இந்தியாவில் சிலர் ஹிட்லரின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டாலும் பெரும்பாலானோர் அதை அச்சுறுத்தலாகவே கருதினர்.

நவீன உலக வரலாறு என்பது சுதந்திரம் மற்றும் மக்களாட்சியைப் பற்றி விளக்கும் கதை மட்டுமல்ல. அது தீவிரவாதம், கொடுங்கோலாட்சி, மரணம் மற்றும் அழிவு ஆகியவைப் பற்றிய கதையாகவும் இருந்து வருகிறது.

AP_SCERT

Chapter – 1

The French Revolution

D9Y5J4

On the morning of 14 July 1789, the city of Paris was in a state of alarm. The king had commanded troops to move into the city. Rumours spread that he would soon order the army to open fire upon the citizens. Some 7,000 men and women gathered in front of the town hall and decided to form a peoples' militia. They broke into a number of government buildings in search of arms.

Finally, a group of several hundred people marched towards the eastern part of the city and stormed the fortress-prison, the Bastille, where they hoped to find hoarded ammunition. In the armed fight that followed, the commander of the Bastille was killed and the prisoners released – though there were only seven of them. Yet the Bastille was hated by all, because it stood for the despotic power of the king. The fortress was demolished and its stone fragments were sold in the markets to all those who wished to keep a souvenir of its destruction.

The days that followed saw more rioting both in Paris and the countryside. Most people were protesting against the high price of bread. Much later, when historians looked back upon this time, they saw it as the beginning of a chain of events that ultimately led to the execution of the king in France, though most people at the time did not anticipate this outcome. How and why did this happen?

JKP – SCERT



Fig.1 – Storming of the Bastille.
Soon after the demolition of the Bastille, artists made prints commemorating the event.

பாடம் - 1

பிரெஞ்சுப் புரட்சி

1789 ஜூலை 14ஆம் நாள் காலை பாரிஸ் நகரம் எச்சரிக்கப்பட்ட நிலையில் இருந்தது. அரசன் நகரத்திற்குள் துருப்புகளை நுழையும் படி ஆணையிட்டான். குடிமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த விரைவில் அவன் ஆணையிடுவான் என வதந்திகள் பரவின. சுமார் 7000 ஆண்கள் மற்றும் பெண்கள் நகர வளாகத்தின் முன் கூடி மக்களின் இராணுவத்தை அமைக்க முடிவெடுத்தனர். அவர்கள் ஆயுதங்களைத் தேடி அரசக் கட்டிடங்களில் அத்துமீறி நுழைந்தனர்.

இறுதியாக மக்களில் நூற்றுக்கணக்கானவர்கள் நகரத்தின் கிழக்குப் பகுதியை நோக்கி அணிவகுத்துச் சென்று பாஸ்டில் எண்ணும் கோட்டைச் சிறையைத் தகர்தெறிந்தனர். அதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆயுதமேந்தி போரில் பாஸ்டிலின் தளபதி கொல்லப்பட்டார். கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். விடுதலை செய்யப்பட்ட கைதிகள் ஏழு பேர் மட்டுமே. மன்னனின் கொடுங்கோல் அதிகாரத்தின் மையமாக பாஸ்டில் இருந்ததால் மக்கள் அனைவரும் அதை வெறுத்தனர். அச்சிறைக் கோட்டைத் தகர்க்கப்பட்டு அதன் கல் துண்டுகள் சந்தைகளில் விற்கப்பட்டன. ஏனெனில் மக்கள் அதன் அழிவின் எச்சங்களை நினைவுப் பரிசாக வைத்திருக்க விரும்பினர்.

அதைத் தொடர்ந்து வந்த நாட்களில் பாரிஸ் மற்றும் நாட்டுப்புறப் பகுதிகளிலும் கலகங்கள் ஏற்பட்டன. பெரும்பாலான மக்கள் உணவிற்காக அதிக விலையை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர். நீண்ட நாட்களுக்குப் பின், வரலாற்றாசிரியர்கள் இக்காலத்தைப் பற்றி திரும்பிப் பார்த்த போது பிரான்சில் அரசனை இறுதியாக சிரச்சேதம் செய்வதற்கு வழிவகுத்த தொடர் நிகழ்வுகளின் தொடக்கமாக இது இருந்தது என்பதை அறிந்தனர். பெரும்பாலான மக்கள் அப்போது இந்த விளைவினை எதிர்பார்க்கவில்லை. இது எவ்வாறு, ஏன் ஏற்பட்டது?



படம் 1 : பாஸ்டில் சிறைச்சாலையைத் தகர்த்தல் பாஸ்டிலின் அழிவிற்குப் பின் கலைஞர்கள் இந்நிகழ்வின் நினைவாக அச்சிடப்பட்ட படம்.

AP SCERT

1 French Society During the Late Eighteenth Century

In 1774, Louis XVI of the Bourbon family of kings ascended the throne of France. He was 20 years old and married to the Austrian princess Marie Antoinette. Upon his accession the new king found an empty treasury. Long years of war had drained the financial resources of France. Added to this was the cost of maintaining an extravagant court at the immense palace of Versailles. Under Louis XVI, France helped the thirteen American colonies to gain their independence from the common enemy, Britain. The war added more than a billion ***livres*** to a debt that had already risen to more than 2 billion *livres*. Lenders who gave the state credit, now began to charge 10 per cent interest on loans. So the French government was obliged to spend an increasing percentage of its budget on interest payments alone. To meet its regular expenses, such as the cost of maintaining an army, the court, running government offices or universities, the state was forced to increase taxes. Yet even this measure would not have sufficed. French society in the eighteenth century was divided into three estates, and only members of the third estate paid taxes.

The society of estates was part of the feudal system that dated back to the middle ages. The term Old Regime is usually used to describe the society and institutions of France before 1789.

Fig. 2 shows how the system of estates in French society was organised. Peasants made up about 90 per cent of the population. However, only a small number of them owned the land they cultivated. About 60 per cent of the land was owned by nobles, the Church and other richer members of the third estate. The members of the first two estates, that is, the **clergy** and the nobility, enjoyed certain privileges by birth. The most important of these was exemption from paying taxes to the state. The nobles further enjoyed feudal privileges. These included feudal dues, which they extracted from the peasants. Peasants were obliged to render services to the lord – to work in his house and fields – to serve in the army or to participate in building roads.

The Church too extracted its share of taxes called **tithes** from the peasants, and finally, all members of the third estate had to pay taxes to the state. These included a direct tax, called ***taille***, and a number of indirect taxes which were levied on articles of everyday consumption like salt or tobacco. The burden of financing activities of the state through taxes was borne by the third estate alone.



Fig.2 – A Society of Estates.
Note that within the Third Estate some were rich and others poor.

New words

Livre – Unit of currency in France, discontinued in 1794

Clergy – Group of persons invested with special functions in the church

Tithe – A tax levied by the church, comprising one-tenth of the agricultural produce

Taille – Tax to be paid directly to the state

AP SCERT

1 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரெஞ்சு சமுதாயம்

1774ல் மன்னர்களின் போர்பான் குடும்பத்தின் 16ஆம் லூயி பிரான்சின் அரியணையை ஏறினார். அவருக்கு அப்போது 20 வயது. அவர் ஆஸ்திரிய நாட்டின் இளவரசியான மேரி அண்டாய்னெட்டை திருமணம் செய்து கொண்டார். அரியணை ஏறிய புதிய அரசரான அவர் கருவூலம் காலியாக இருப்பதைக் கண்டார். நீண்ட காலம் நீடித்த போர்களால் பிரான்சின் நிதி வளங்கள் காலியாக்கப்பட்டன. வெர்சைல்ஸ் அரண்மனையில் ஆடம்பரமான சபையை நிர்வகிக்கவும் பெரும் செலவு செய்யப்பட்டது. 16ஆம் லூயியின் தலைமையில் 13 அமெரிக்கக் குடியேற்றங்கள் தங்களின் பொது எதிரியான பிரிட்டனிடமிருந்து விடுதலை பெற பிரான்சு உதவி செய்தது. இப்போரினால் ஏற்கனவே இருந்த 2 பில்லியன் லிவ்ரேக்கள் கடனுடன் மேலும் 1 பில்லியன் லிவ்ரே கடன் ஏற்பட்டது. அரசுக்குக் கடன் அளித்தவர்கள் தற்போது கடன்தொகைக்கு 10 சதவீத வட்டி விதிக்கத் தொடங்கினர். எனவே பிரெஞ்சு அரசாங்கம் தனது வரவு செலவு திட்டத்தில் அதிகப்படியான பணத்தை வட்டி செலுத்துவதற்கு செலவிட்டது. இராணுவத்தை நிர்வகிக்கும் செலவு, அரச சபை, அரசாங்க அலுவலகங்களை அல்லது பல்கலைக் கழகங்களை நடத்துதல் போன்ற அன்றாடச் செலவுகளை சமாளிக்க அரசு வரிகளை அதிகரிக்க வலியுறுத்தப்பட்டது. இருப்பினும் இந்த நடவடிக்கையும் போதுமானதாக இல்லை. 18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு சமுதாயம் மூன்று எஸ்டேட்டுகளாக (நிலைகள்) பிரிக்கப்பட்டது. இதில் மூன்றாம் எஸ்டேட்டில் இருந்தவர்கள் மட்டும் வரிகளைச் செலுத்தினர்.

எஸ்டேட்டுகளின் சமூகம் இடைக்காலத்தில் இருந்த நிலப்பிரபுத்துவ முறையின் பாகமாகும். பண்டைய ஆட்சி என்னும் சொல் பொதுவாக 1789க்கு முன் இருந்த பிரெஞ்சு சமுதாயத்தையும் நிறுவனங்களையும் குறிப்பிட பயன்படுத்தப் பட்டது. பிரெஞ்சு சமுதாயம் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டிருந்து என்பதை படம் 2 நமக்கு காட்டுகிறது. விவசாயிகள் மக்கள் தொகையில் 90 சதவீதம்பேர் இருந்தனர். எனினும் அவர்களில் சிலர் மட்டும் தாங்கள் சாகுபடி செய்த நிலத்தின் உரிமையாளர்களாக இருந்தனர். சுமார் 60 சதவீத நிலம் மூன்றாம் எஸ்டேட்டில் இருந்த உயர்குடிமக்கள், சர்ச் மற்றும் பிற உறுப்பினர்களிடம் இருந்தது. முதல் இரண்டு எஸ்டேட்டுகளில் இருந்த மதகுருக்கள் மற்றும் உயர்குடிமக்களுக்கு பிறக்கும் போதிலிருந்தே சில சலுகைகள் இருந்தன. அரசிற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்கப்படுவது இவற்றில் முக்கிய சலுகையாகும். உயர்குடிமக்கள் நிலபிரபுத்துவ முறையின் சில சலுகைகளையும் அனுபவித்தனர். இதில் விவசாயிகள் செலுத்திய நில வரி நிலுவைகள் அடங்கும். விவசாயிகள் நிலச்சுவாந்தார்களின் வீடு அல்லது வயல்களில் வேலை செய்யவும், இராணுவ சேவை செய்யவும் அல்லது சாலை கட்டுமானப் பணிகளிலும் ஈடுபட்டு வந்தனர்.

சர்ச்சும் விவசாயிகளிடமிருந்து **டைத்ஸ்** என்று அழைக்கப்படும் வரிகளை வசூலித்தது. இறுதியாக மூன்றாம் எஸ்டேட்டின் அனைத்து உறுப்பினர்களும் அரசிற்கு வரிகளை செலுத்த வேண்டியிருந்தது. இதில் டெய்ல் என்னும் நேர்முக வரியும் அடங்கும். மேலும் அன்றாட நுகர்வுப் பொருள்களான உப்பு அல்லது புகையிலை மீதும், பல்வேறு மறைமுக வரிகள் விதிக்கப்பட்டன. வரிகள் மூலம் அரசின் நிதி நடவடிக்கைகளின் பாரம் முழுவதும் மூன்றாம் எஸ்டேட்டால் மட்டும் சுமக்கப்பட்டது.



எஸ்டேட்டுகளின் சமூகம்
மூன்றாம் எஸ்டேட்டுக்குள் சிலர் செல்வந்தர் களாவும், சிலர் ஏழைகளாகவும் இருப்பதைக் கவனிக்கவும்.

புதிய சொற்கள்

லிவ்ரே – பிரான்சில் நாணயத்தின் அலகு 1794ல் நிறுத்தப்பட்டது. மதகுருக்கள் சர்ச்சில் சிறப்பு சலுகைகளை அனுபவிக்கும் நபர்களின் குழு.

டைத்ஸ் – விவசாய உற்பத்தியில் பத்தில் ஒருபங்கு வரியாக சர்ச் வசூலிக்கும் வரி

டெய்ல் – அரசிற்கு நேரடியாக செலுத்தப்பட வேண்டிய வரி.

'This poor fellow brings everything, grain, fruits, money, salad. The fat lord sits there, ready to accept it all. He does not even care to grace him with a look.'

'The nobleman is the spider, the peasant the fly.'

'The more the devil has, the more he wants.'

Fig.3** – **The Spider and the Fly.
*An **anonymous** etching.*

Activity

Explain why the artist has portrayed the nobleman as the spider and the peasant as the fly.

1.1 The Struggle to Survive

The population of France rose from about 23 million in 1715 to 28 million in 1789. This led to a rapid increase in the demand for foodgrains. Production of grains could not keep pace with the demand. So the price of bread which was the staple diet of the majority rose rapidly. Most workers were employed as labourers in workshops whose owner fixed their wages. But wages did not keep pace with the rise in prices. So the gap between the poor and the rich widened. Things became worse whenever drought or hail reduced the harvest. This led to a **subsistence crisis**, something that occurred frequently in France during the Old Regime.

New words

Subsistence crisis – An extreme situation where the basic means of livelihood are endangered

Anonymous – One whose name remains unknown

இந்த ஏழை தன்னிடமுள்ள தானியம், பழங்கள், பணம், பழக்கலவை போன்று தன்னிடமுள்ள அனைத்தையும் கொண்டு வருகிறார். திமிர்பிடித்த பிரபு அனைத்தையும் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறான். அவன் தன் பார்வையால் சிறிதளவும் கருணை காட்டுவதாகத் தெரியவில்லை.

இப்பிரபு சிலந்தியாகவும் விவசாயி ஈயாவும் உள்ளனர்.

இப்பேய் பிரபுவுக்கு எவ்வளவு அதிகமாக இருப்பினும் மேலும் அதிகமாக விரும்புவார்.

படம் : 3 சிலந்தியும் ஈயும். பெயர் தெரியாத ஒருவரின் சித்திரப் படைப்பு

செயல்

வரைபடக்கலைஞர் பிரபுவை சிலந்தியாகவும் விவசாயியை ஈயாகவும் ஏன் சித்தரித்தார் என்பதை விளக்கு.

1.1. வாழ்வதற்கான போராட்டம்

பிரான்சில் 1715ல் 23மில்லியனாக இருந்த மக்கள் தொகை 1789ல் 28மில்லியன்களாக அதிகரித்தது. இதனால் உணவு தானியங்களின் தேவை வேகமாக அதிகரித்தது. தானியங்களின் உற்பத்தி அதிகரித்த தேவைக்கேற்ப அதிகரிக்கவில்லை. எனவே பெரும்பான்மையினரின் முக்கிய உணவான ரொட்டியின் விலை வேகமாக அதிகரித்தது. பெரும்பாலான உழைப்பாளர்கள் பணிமனைக் கூலியாட்களாக பணியமர்த்தப்பட்டனர். விலை உயர்விற்கேற்ப கூலிகள் உயரவில்லை. எனவே ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமான இடைவெளி அதிகரித்தது. எப்போதெல்லாம் வறட்சி அல்லது அறுவடை குறைந்ததோ அப்போதெல்லாம் நிலைமை மிகவும் மோசமானது. நிலைப்பாட்டு நெருக்கடி நிலைக்கு இது வழிவகுத்தது. பண்டைய ஆட்சியில் இது பிரான்சில் அடிக்கடி நிகழ்ந்தது.

புதிய சொற்கள்

நிலைப்பாட்டின் நெருக்கடி நிலை – வாழ்வாதாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் தீவிரமான நிலை

பெயர் தெரியாத – ஒருவரின் பெயர் தெரியாமல் இருப்பது.

1.2 How a Subsistence Crisis Happens



Fig.4 – The course of a subsistence crisis.

Activity

Fill in the blank boxes in Fig. 4 with appropriate terms from among the following:

Food riots, scarcity of grain, increased number of deaths, rising food prices, weaker bodies.

1.3 A Growing Middle Class Envisages an End to Privileges

In the past, peasants and workers had participated in revolts against increasing taxes and food scarcity. But they lacked the means and programmes to carry out full-scale measures that would bring about a change in the social and economic order. This was left to those groups within the third estate who had become prosperous and had access to education and new ideas.

The eighteenth century witnessed the emergence of social groups, termed the middle class, who earned their wealth through an expanding overseas trade and from the manufacture of goods such as woollen and silk textiles that were either exported or bought by the richer members of society. In addition to merchants and manufacturers, the third estate included professions such as lawyers or administrative officials. All of these were educated and believed that no group in society should be privileged by birth. Rather, a person's social position must depend on his merit. These ideas envisaging a society based on freedom and equal laws and opportunities for all, were put forward by philosophers such as John Locke and Jean Jacques Rousseau. In his *Two Treatises of Government,* Locke sought to refute the doctrine of the divine and absolute right

AP SCERT

1.2 நிலைப்பாட்டு நெருக்கடி ஏற்படும் விதம்



நிலைப்பாட்டு நெருக்கடியின் படிநிலைகள்

செயல்

படம் 4ல் உள்ள காலியான கட்டங்களில் கீழ்காணும் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்பவும்.

உணவுப் போராட்டங்கள், தானியப் பற்றாக்குறை, இறப்பு எண்ணிக்கை அதிகரித்தல், உணவு விலை ஏற்றம், பலவீன வர்க்கம்.

1.3. நடுத்தர வர்க்கம் சலுகைகளை முடிவுக்கு கொண்டுவருமாறு கருதியது.

கடந்த காலத்தில் விவசாயிகளும், உழைப்பாளர்களும் அதிகரிக்கும் வரிகளையும் உணவுப் பற்றாக்குறையையும் எதிர்க்கும் புரட்சிகளில் பங்குகொண்டனர். ஆனால் சமூகம் மற்றும் பொருளாதாரச் சீரமைப்பில் மாற்றம் கொண்டுவருவதற்கான முழுமையான நடவடிக்கைகளை செயற்படுத்தும் வழிமுறைகளும் திட்டங்களும் அவர்களிடம் இல்லை. இது மூன்றாம் எஸ்டேட்டில் உள்ள செல்வந்தர்கள் மற்றும் கல்வி வாய்ப்பையும் புதிய சிந்தனைகளையும் உடையவர்களிடம் விடப்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டில் நடுத்தர வகுப்பினர் என்னும் புதிய சமுதாயப் பிரிவினர் தோன்றினர். அவர்கள் கம்பளி மற்றும் பட்டுத்துணிகளை உற்பத்தி செய்து சமூகத்தின் பணக்கார உறுப்பினர்களுக்கு ஏற்றுமதி மற்றும் விற்றல் போன்ற அயல்நாட்டு வாணிகத்தின் மூலம் அவர்கள் பொருளீட்டினர். மூன்றாம் எஸ்டேட்டில் வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் வழக்கறிஞர்கள் அல்லது நிர்வாக அதிகாரிகளும் இருந்தனர். இவர்கள் அனைவரும் நன்கு கற்றவர்கள்.

அவர்கள் பிறப்பால் எவ்வித பிரிவினருக்கும் சிறப்புச் சலுகைகள் இருக்கக்கூடாது என்று கருதினர். மாறாக ஒருவரின் சமுதாய நிலை மீது அவர்களின் மதிப்பு ஆதாரப்பட்டிருந்தல் வேண்டும். ஜான் லாக் மற்றும் ஜான் ஜாக் ரூஸோ ஆகியோரின் சிந்தனைகள் என சுதந்திரம், சமமான சட்டங்கள் அனைவருக்கும் வாய்ப்பு ஆகிய சிந்தனைகளின் அடிப்படையில் சமுதாயம் ஆதாரப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருதப்பட்டது. லாக் தன்னுடைய 'அரசின் இரு உடன்படிக்கைகள்', என்னும் நூலில் மன்னரின் தெய்வீக மற்றும் முழு உரிமையை நிலைநாட்ட விரும்பினார்.

of the monarch. Rousseau carried the idea forward, proposing a form of government based on a social contract between people and their representatives. In *The Spirit of the Laws*, Montesquieu proposed a division of power within the government between the legislative, the executive and the judiciary. This model of government was put into force in the USA, after the thirteen colonies declared their independence from Britain. The American constitution and its guarantee of individual rights was an important example for political thinkers in France.

The ideas of these philosophers were discussed intensively in salons and coffee-houses and spread among people through books and newspapers. These were frequently read aloud in groups for the benefit of those who could not read and write. The news that Louis XVI planned to impose further taxes to be able to meet the expenses of the state generated anger and protest against the system of privileges.

AP SCERT

Source A

Accounts of lived experiences in the Old Regime

1. Georges Danton, who later became active in revolutionary politics, wrote to a friend in 1793, looking back upon the time when he had just completed his studies:

'I was educated in the residential college of Plessis. There I was in the company of important men … Once my studies ended, I was left with nothing. I started looking for a post. It was impossible to find one at the law courts in Paris. The choice of a career in the army was not open to me as I was not a noble by birth, nor did I have a patron. The church too could not offer me a refuge. I could not buy an office as I did not possess a sou. My old friends turned their backs to me … the system had provided us with an education without however offering a field where our talents could be utilised.'

2. An Englishman, Arthur Young, travelled through France during the years from 1787 to 1789 and wrote detailed descriptions of his journeys. He often commented on what he saw.

'He who decides to be served and waited upon by slaves, ill-treated slaves at that, must be fully aware that by doing so he is placing his property and his life in a situation which is very different from that he would be in, had he chosen the services of free and well-treated men. And he who chooses to dine to the accompaniment of his victims' groans, should not complain if during a riot his daughter gets kidnapped or his son's throat is slit.'

Source

Activity

What message is Young trying to convey here? Whom does he mean when he speaks of 'slaves'? Who is he criticising? What dangers does he sense in the situation of 1787?

மக்களுக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்குமிடையேயான ஓர் சமுதாய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான ஓர் அரசாங்க முறைக்கருத்தை ரூசோ முன்மொழிந்தார். 'சட்டங்களின் ஆன்மா' என்னும் நூலில் மாண்டெஸ்க்யூ அரசாங்கத்திற்குள்ளாகவே சட்டமியற்றும்துறை, செயல்துறை மற்றும் நீதித்துறைகளுக்கிடையே அதிகாரப் பகிர்வு இருத்தல் வேண்டும் என்னும் கருத்தை முன்மொழிந்தார். பிரிட்டனிடமிருந்த அமெரிக்காவில் 13 காலனிகள் சுதந்திரத்தை அறிவித்த பின்னர் இவ்வகையான அரசாங்க மாதிரியை அமெரிக்கா நடைமுறைக்கு கொண்டு வந்தது. அமெரிக்க அரசியலமைப்புச் சட்டமும் அதன் தனிநபர் உரிமையை உறுதியளித்ததும் பிரான்சில் அரசியல் சிந்தனையாளர்களுக்கு ஒரு முக்கிய எடுத்துக்காட்டாக இருந்தது.

இந்த தத்துவஞானிகளின் சிந்தனைகள் முடிதிருத்தங்களிலும் காஃபி விடுதிகளிலும் விவாதிக்கப்பட்டு நூல்கள் மற்றும் செய்தித்தாள்கள் வாயிலாக மக்களிடையே பரப்பப்பட்டது. இக்கருத்துகள் அவ்வப்போது குழுக்களிடையே எழுதப்படிக்கத் தெரியாதவர்களின் வசதிக்காக உரக்க வாசிக்கப்பட்டன. பதினாறாம் லூயி அரசின் செலவுகளைச் சந்திக்க வரி உயர்த்தப்போகிறார் என்னும் செய்தி மக்களிடையே கோபமூட்டியது. மேலும் சலுகை முறையை எதிர்த்து எதிர்ப்பு ஏற்பட்டது.

ஆதாரம் – அ

பண்டைய ஆட்சி காலத்தில் வாழ்ந்த அனுபவக் குறிப்புகள்

1. பிற்கால புரட்சிகரமான அரசியலில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிய ஜார்ஜஸ் டான்டன் 1793ல் ஒரு நண்பருக்கு தன் கற்றலை முடித்தபோது கடந்த காலத்தைப் பற்றி எழுதினார்.

பிளெஸ்ஸிஸின் உண்டுறைவிடக் கல்லூரியில் நான் கல்வி பயின்றேன். அங்கு முக்கியமான மனிதர்களின் குழுவில் நான் இருந்தேன். என் கல்வி முடிந்தவுடன் என்னுடன் எதுவுமில்லை. நான் ஒரு பதவிக்காக எதிர்பார்த்திருந்தேன். பாரிசில் சட்ட நீதிமன்றங்களில் பதவி பெறுவது சாத்தியமல்ல. நான் ஓர் உயர்குடியில் பிறந்தவனோ அல்லது எனக்கு ஆதரவளிப்பவரோ இல்லாததால் இராணுவத்திலும் எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. சர்ச்சும் எனக்கு எவ்வித புகலிடமும் அளிக்கவில்லை. பிரான்சின் எவ்வித நாணயமும் என்னிடமில்லாததால் என்னால் எந்த அலுவலகத்தையும் வாங்க இயலவில்லை. என் பழைய நண்பர்களும் எனக்கு தங்களின் புற முதுகைக் காட்டினர். எங்கள் திறன்களை பயன்படுத்திக் கொள்வதற்கான முறையை ஒதுக்காத ஒரு கல்வியை எங்களுடைய அமைப்பு எங்களுக்கு வழங்கியது.

2. ஆர்தர் யங் எண்ணும் ஆங்கிலேயர் 1787 முதல் 1789 வரையிலான ஆண்டுகளில் பிரான்சில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட தன் பயணங்களைப் பற்றி விரிவான குறிப்புகளை எழுதினார்.

சேவை செய்ய முடிவு செய்தவன், அடிமைகளால் கவனிக்கப்படுதல், அடிமைகளை மோசமாக நடத்துதல், போன்றவற்றால் அவன் தன்னையும் தன் உடைமைகளையும் நன்கு பராமரிக்க ஒருவரை நோக்கி காத்திருந்தான், மேலும் தன் பலியானவர்களின் முனகல்களிடையே உண்ண வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டவன் தன் மகள் கடத்தப்பட்டாலோ அல்லது தன் மகனுடைய கழுத்து அறுக்கப்பட்டாலும் புகார் அளிக்க இயலாத நிலையிலிருந்தான்.

ஆதாரம்

செயல் :

ஆர்தர் யங் இங்கு என்ன செய்தியைக் கூற விரும்புகிறார்? அடிமைகள் பற்றி அவர் பேசுகையில் யாரை அவர் அவ்வாறு குறிப்பிடுகிறார்? அவர் யார் மீது குற்றம் சுமத்துகிறார்? 1787ன் சூழ்நிலையில் எவ்விதமான ஆபத்தினை அவர் உணர்கிறார்,

© TNSCERT

2 The Outbreak of the Revolution

Louis XVI had to increase taxes for reasons you have learnt in the previous section. How do you think he could have gone about doing this? In France of the Old Regime the monarch did not have the power to impose taxes according to his will alone. Rather he had to call a meeting of the Estates General which would then pass his proposals for new taxes. The Estates General was a political body to which the three estates sent their representatives. However, the monarch alone could decide when to call a meeting of this body. The last time it was done was in 1614.

On 5 May 1789, Louis XVI called together an assembly of the Estates General to pass proposals for new taxes. A resplendent hall in Versailles was prepared to host the delegates. The first and second estates sent 300 representatives each, who were seated in rows facing each other on two sides, while the 600 members of the third estate had to stand at the back. The third estate was represented by its more prosperous and educated members. Peasants, artisans and women were denied entry to the assembly. However, their grievances and demands were listed in some 40,000 letters which the representatives had brought with them.

Voting in the Estates General in the past had been conducted according to the principle that each estate had one vote. This time too Louis XVI was determined to continue the same practice. But members of the third estate demanded that voting now be conducted by the assembly as a whole, where each member would have one vote. This was one of the democratic principles put forward by philosophers like Rousseau in his book *The Social Contract*. When the king rejected this proposal, members of the third estate walked out of the assembly in protest.

The representatives of the third estate viewed themselves as spokesmen for the whole French nation. On 20 June they assembled in the hall of an indoor tennis court in the grounds of Versailles. They declared themselves a National Assembly and swore not to disperse till they had drafted a constitution for France that would limit the powers of the monarch. They were led by Mirabeau and Abbé Sieyès. Mirabeau was born in a noble family but was convinced of the need to do away with a society of feudal privilege. He brought out a journal and delivered powerful speeches to the crowds assembled at Versailles. Abbé Sieyès, originally a priest, wrote an influential pamphlet called 'What

Some important dates

1774
Louis XVI becomes king of France, faces empty treasury and growing discontent within society of the Old Regime.

1789
Convocation of Estates General, Third Estate forms National Assembly, the Bastille is stormed, peasant revolts in the countryside.

1791
A constitution is framed to limit the powers of the king and to guarantee basic rights to all human beings.

1792-93
France becomes a republic, the king is beheaded.
Overthrow of the Jacobin republic, a Directory rules France.

1804
Napoleon becomes emperor of France, annexes large parts of Europe.

1815
Napoleon defeated at Waterloo.

Activity

Representatives of the Third Estate take the oath raising their arms in the direction of Bailly, the President of the Assembly, standing on a table in the centre. Do you think that during the actual event Bailly would have stood with his back to the assembled deputies? What could have been David's intention in placing Bailly (Fig.5) the way he has done?

AP SCERT

2. புரட்சி பரவுதல்

16ஆம் லூயி எந்த காரணங்களுக்காக வரிகளை உயர்த்தினர் என்பதைப் பற்றி முந்தைய பாடப்பிரிவில் நீங்கள் கற்றீர்கள். அவர் இதை ஏன் பிரிவில் நீங்கள் கற்றீர்கள்? பிரான்சில் பண்டைய ஆட்சியின் மன்னருக்கு தன் விருப்பப்படி வரிவிதிக்கும் அதிகாரம் இல்லை மாறாக புதிய வரிகளுக்கான முன்மொழிதல்/ பரிந்துரைகளை முன்வைப்பதற்காக அவர் எஸ்டேட்ஸ் ஜெனரலை கூட்டினார். எஸ்டேட்ஸ் ஜெனரல் என்பது ஓர் அரசியல் அங்கமாகும். பிற மூன்று எஸ்டேட்டுகளும் தங்களுடைய பிரதிநிதிகளை எஸ்டேட்ஸ் ஜெனரலுக்கு அனுப்புவர். இருப்பினும் எப்போது எஸ்டேட்ஸ் ஜெனரலுக்கான கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்பது மன்னரே முடிவு செய்வார். இறுதியாக 1614ல் இது கூட்டப்பட்டது. பதினாறாம் லூயி 1789ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் நாள் புதிய வரிகளை உயர்த்த வேண்டும் என்னும் பரிந்துரைகளைக் கொண்டு எஸ்டேட்ஸ் ஜெனரலைக் கூட்டினார். வெர்சைல்ஸின் ஒரு பிரகாசமான வளாகத்தில் பிரதிநிதிகள் தங்க வைக்கப்பட்டனர். முதல் மற்றும் இரண்டாம் எஸ்டேட்டுகள் ஒவ்வொன்றும் தலா 300 பிரதிநிதிகளை அனுப்பி வைத்தன. அவர்கள் இருபுறங்களிலும் எதிரெதிரே ஒருவரையொருவர் நோக்கிய வண்ணம் அமரச் செய்யப்பட்டனர். மூன்றாம் எஸ்டேட்டின் 600 உறுப்பினர்களும் அவர்களுக்குப் பின்புறம் நிற்க வைக்கப்பட்டனர். மூன்றாம் எஸ்டேட் தன் வளமான கற்றறிந்த உறுப்பினர்களை அனுப்பி வைத்தது. விவசாயிகள், கைத்தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. எனினும் அவர்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகள் 40000 கடிதங்களில் பட்டியலிடப்பட்டு தங்களுடைய பிரதிநிதிகளால் கொண்டுவரப்பட்டிருந்தன.

கடந்த காலத்தில் எஸ்டேட்ஸ் ஜெனரலுக்கான வாக்களிப்பு ஒவ்வோர் எஸ்டேட்ஸ் உறுப்பினருக்கும் ஒரு வாக்கு என்னும் விதிமுறையில் நடத்தப்பட்டது. இந்த முறையும் பதினாறாம் லூயி கடந்த ஆண்டுகளின் பழைய முறையையே தொடர்ந்தார். ஆனால் மூன்றாம் எஸ்டேட்டில் இருந்த உறுப்பினர்கள் சபையின் முழுமைக்கும் நடத்தப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தது ஏனெனில் அதன் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு வாக்கு இருந்தது. இது ரூஸோ போன்ற தத்துவஞானியால் இயற்றப்பட்ட சமுதாய ஒப்பந்தம் என்னும் நூலில் மக்களாட்சி விதிமுறைகளில் ஒன்றாக முன்மொழியப்பட்டது. அரசன் இம்முன்மொழிதலை மறுத்தபோது மூன்றாம் எஸ்டேட் உறுப்பினர்கள் அரசனை எதிர்த்து சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

மூன்றாம் எஸ்டேட்டின் பிரதிநிதிகள் தங்களை பிரெஞ்சு தேசம் முழுமைக்கும் தாங்களே பிரதிநிதிகள் எனக் கருதிக்கொண்டனர். அவர்கள் வெர்சைல்ஸ் நிலப்பகுதியில் உள்ள ஓர் உட்புற டென்னிஸ் மைதானத்தின் வளாகத்தில் ஜுன் 20ல் குழுமினர். அவர்கள் தங்களை தேசிய சபை என்று கருதிக்கொண்டு மன்னரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் பிரான்சிற்கான ஒரு அரசியல் அமைப்புச் சட்டம் வரையும் வரை அங்கிருந்து விலகமாட்டோம் என்று உறுதி பூண்டனர். அவர்கள் மிராபு மற்றும் அப்பே சயேஸ் போன்றாரால் வழி நடத்தப்பட்டனர். மிராபு உயர்குடியில் பிறப்பினும் நிலப்பிரபுத்துவ சலுகை சமூகத்திலிருந்து விலகி இருப்பதற்கு சமாதானம் செய்யப்பட்டார். அவர் ஒரு செய்தித்தாளை வெளியிட்டார். மேலும் வெர்சைல்ஸில் கூடிய கூட்டத்தினரிடையே ஆற்றல் மிக்க உரைகளை நிகழ்த்தினார்.

சில முக்கிய ஆண்டுகள்

1774 : பிரான்ஸ் மன்னராக பதினாறாம் லூயி பதவியேற்றார். அவர் அப்போது காலியான கருவூலத்தையும் எதிர்கொண்டார். பண்டைய ஆட்சியின் போது சமுதாயத்தில் அதிருப்தியும் மேலோங்கி இருந்தது.

1789 : எஸ்டேட்ஸ் ஜெனரலின் பேரவைக் கூட்டப்படுதல் மூன்றாம் எஸ்டேட் தேசிய சபையாக மாறுதல் பாஸ்டில் சிறை உடைத்தெறிதல். நாடெங்கிலும் விவசாயப் புரட்சிகள் பரவுதல்.

1791 : அரசின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கி அனைத்து மனிதர்களுக்கும் அடிப்படை உரிமைகளை உறுதியளித்தல்.

1792-93 அரசின் சிரச்சேதம் செய்யப்பட்டு பிரான்ஸ் குடியரசானது ஜேகோபின்ஸ் குடியரசானது. ஜேகோபின் குடியரசு பதவி நீக்கம் செய்யப்பட்டு பிரான்ஸ் இயக்கம் அறிவுறுத்தும் குழு ஆட்சி செய்தது.

1804 : நெப்போலியன் பிரான்சின் பேரரசரானார்.

1815 : நெப்போலியன் வாட்டர்லூ என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டார்.

செயல்

மூன்றாம் எஸ்டேட்டின் பிரதிநிதிகள் ஒரு மேசை நடுவில் நின்றுக்கொண்டிருந்த சபையின் தலைவரான பெய்லியின் இருப்பிடத்தை நோக்கி தங்களுடைய கைகளை உயர்த்துவதற்கு உறுதி மேற்கொண்டனர். உண்மையான நிகழ்வின் போது கூடியிருந்த பிரதிநிதிகளின் பின் நின்றிருந்தார் என்று கருதுகிறீர்களா? பெய்லியை அவ்வாறு வைக்கப்படுவதில் இருந்த உள்நோக்கம் என்னவாக இருக்கும்? (படம் 5)

Fig.5 – The Tennis Court Oath.
Preparatory sketch for a large painting by Jacques-Louis David. The painting was intended to be hung in the National Assembly.

is the Third Estate'?

While the National Assembly was busy at Versailles drafting a constitution, the rest of France seethed with turmoil. A severe winter had meant a bad harvest; the price of bread rose, often bakers exploited the situation and hoarded supplies. After spending hours in long queues at the bakery, crowds of angry women stormed into the shops. At the same time, the king ordered troops to move into Paris. On 14 July, the agitated crowd stormed and destroyed the Bastille.

In the countryside rumours spread from village to village that the lords of the **manor** had hired bands of brigands who were on their way to destroy the ripe crops. Caught in a frenzy of fear, peasants in several districts seized hoes and pitchforks and attacked **chateaux**. They looted hoarded grain and burnt down documents containing records of manorial dues. A large number of nobles fled from their homes, many of them migrating to neighbouring countries.

Faced with the power of his revolting subjects, Louis XVI finally accorded recognition to the National Assembly and accepted the principle that his powers would from now on be checked by a constitution. On the night of 4 August 1789, the Assembly passed a decree abolishing the feudal system of obligations and taxes. Members of the clergy too were forced to give up their privileges. Tithes were abolished and lands owned by the Church were confiscated. As a result, the government acquired assets worth at least 2 billion livres.



Fig.6 – The spread of the Great Fear.
The map shows how bands of peasants spread from one point to another.

New words

Chateau (pl. chateaux) – Castle or stately residence belonging to a king or a nobleman

Manor – An estate consisting of the lord's lands and his mansion

AP – SCERT

படம் 5 : டென்னிஸ் மைதான வாக்குறுதி ஜேக்வஸ் லூயி டேவிட் அவர்களால் வரையப்பட்ட மிகப்பெரிய ஆயத்த ஓவியம் இவ்வோவியம் தேசிய சபையில் தொங்கவிடப்படுவதற்காக வரையப்பட்டது.

அப்பே சையஸ், முதலில் மதபோதகரான இவர் ஒரு செல்வாக்கு மிக்க கைப்பிரதியான மூன்றாம் எஸ்டேட் என்றால் என்ன என்பதை எழுதினார்.

வெர்சைல்சில் தேசிய சபை அரசியலமைப்புச் சட்டத்தை வரைந்து கொண்டிருக்கும்போது பிரான்சின் பிற பகுதிகளின் கொந்தளிப்புடன் கொதித்துக்கொண்டிருந்தது தீவிரமான குளிர் காரணமாக அறுவடை மோசமானதாக இருந்தது. உணவின் விலை அதிகரித்தது. ரொட்டி தயாரிப்பாளர்கள் சூழ்நிலையை பயன்படுத்திக்கொண்டு ரொட்டி அளிப்புகளை பதுக்கினர். ரொட்டி தயாரிப்பகங்கள் நீண்ட குழுவில் பல மணிநேரம் காத்திருந்த பின்னர், கோபமுற்ற பெண்கள் கடைகளைத் தாக்கினர் அதே சமயத்தில் மன்னர் பாரிசுக்கு தன் படைகளை அனுப்ப ஆணையிட்டார். ஜுலை 14ஆம் நாள் கிளர்ச்சியடைந்த மக்கள் பாஸ்டில் சிறையை தாக்கி அதனை அழித்தனர்.

நாட்டுப்புறங்களில் கொள்ளையர்களை வாடகைக்கு அமர்த்தி முதிர்ந்த பயிர்களை அழிக்க பண்ணை முதலாளிகள் ஏற்பாடு செய்துள்ளனர் எண்ணும் செய்தி பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவியது. பல்வேறு மாவட்டங்களில் பயத்தால் நடுக்கமுற்ற விவசாயிகள் மண்வெட்டி மற்றும் வைக்கோல் வாரிகளையும் கொண்டு கோட்டை அரண்களைக் தாக்கினர். அவர்கள் பதுக்கப்பட்ட தானியங்களை கொள்ளையடித்தனர். பண்ணை நிலுவைத்தொகை குறிப்புகள் கொண்ட ஆவணங்களை எரித்துவிட்டனர். பெருமளவிலான உயர்குடிமக்கள் தங்கள் வீடுகளிலிருந்து ஓடிவிட்டனர். அவர்களில் பலர் அண்டை நாடுகளுக்கு குடிபெயர்ந்தனர்.

புரட்சியில் ஈடுபட்ட தன் குடிமக்களின் ஆற்றலை எதிர்கொண்டதால் பதினாறாம் லூயி, இறுதியாக தேசிய சபைக்கு அங்கீகாரம் வழங்கி, இனிமேல் தன் அதிகாரங்கள் அரசியலமைப்புச் சட்டத்தால் கட்டுப்படுத்தப்படும் எண்ணும் விதிமுறையை ஏற்றுக்கொண்டார். 1789 ஆகஸ்ட் 4ஆம் நாள் இரவு கடமைகள் மற்றும் வரிகள் கொண்ட நிலப்பிரபுத்துவ முறையை அறிவிக்கும் ஆணையை பிறப்பித்தது. மதகுருமார்களின் சலுகைகளையும் கைவிடும்படி வலியுறுத்தப்பட்டனர். டைத்துகள் ரத்து செய்யப்பட்டன. மேலும் சர்ச்சுகளிடமிருந்த நிலங்கள் கைப்பற்றப்பட்டன. இதன் விளைவாக அரசாங்கம் சுமார் 2மில்லியன் லிவ்ரேக்கள் அளவிற்கு சொத்துகளைப் பெற்றது.



பெரும் அச்சம் பரவல் இந்த நிலப்படம் விவசாய குழுமங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எவ்வாறு பரவின என்பதை தெரிவிக்கிறது.

புதிய சொற்கள்

கோட்டை அரண் : அரண்மனை அல்லது பெரிய மாளிகை. அரசர் அல்லது உயர்குடிமக்கள் தங்குமிடம்.

பண்ணை : நிலச்சுவாந்தார்களின் நிலங்கள் மற்றும் மாளிகைகள்.

2.1 France Becomes a Constitutional Monarchy

The National Assembly completed the draft of the constitution in 1791. Its main object was to limit the powers of the monarch. These powers instead of being concentrated in the hands of one person, were now separated and assigned to different institutions – the legislature, executive and judiciary. This made France a constitutional monarchy. Fig. 7 explains how the new political system worked.



Fig. 7 – The Political sytstem under the Constitution of 1791.

AP – SCERT

The Constitution of 1791 vested the power to make laws in the National Assembly, which was indirectly elected. That is, citizens voted for a group of electors, who in turn chose the Assembly. Not all citizens, however, had the right to vote. Only men above 25 years of age who paid taxes equal to at least 3 days of a labourer's wage were given the status of active citizens, that is, they were entitled to vote. The remaining men and all women were classed as passive citizens. To qualify as an elector and then as a member of the Assembly, a man had to belong to the highest bracket of taxpayers.

2.1 அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி

தேசிய சபை 1791ல் அரசியலமைப்புச் சட்டத்தை எழுதி முடித்தது. மன்னரின் அதிகாரங்களை வரம்புக்குட்படுத்துவதே இதன் நோக்கம் ஆகும். இந்த அதிகாரங்கள் ஒருவரிடமே குவித்திருக்காமல், தற்போது பகிர்ந்தளிக்கப்பட்டு வெவ்வேறு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டது – சட்டமியற்றும்துறை, செயல்துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றிடம் வழங்கப்பட்டது எனவே பிரான்சு ஒரு அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சியானது. படம் 7 : புதிய அரசியல் முறை எவ்வாறு பணியாற்றுகிறது என்பதை விளக்குகிறது.



படம் 7 : 1791ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் இருந்த அரசியல் முறை

AP SCERT

1791ன் அரசியலமைப்பு, தேசிய சபையிடம் சட்டங்களை இயற்றும் அதிகாரத்தை வழங்கியது. அதாவது குடிமக்கள் வேட்பாளர் குழுவினருக்கு வாக்களிப்பீர். தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த வேட்பாளர்கள். சபையை தேர்ந்தெடுப்பர். ஆனால் அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை இல்லை. 25 வயதிற்கு மேற்பட்ட குறைந்தபட்சம் உழைப்பாளர்களின் மூன்று நாட்கள் கூலியளவிற்கு வரியை யார் செலுத்துகிறார்களோ அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. மீதமிருந்த ஆண்கள் மற்றும் அனைத்து பெண்களும் செயல்படா குடிமக்கள் என்று வகைப்படுத்தப்பட்டனர். வேட்பாளராக தகுதி பெறுவதற்கும் பின்னர் சபையின் உறுப்பினராவதற்கும் ஒரு அதிகளவில் வரி செலுத்துபவர் பட்டியலில் இருத்தல் வேண்டும்.

Fig.8 *– The Declaration of the Rights of Man and Citizen, painted by the artist Le Barbier in 1790. The figure on the right represents France. The figure on the left symbolises the law.*

The Constitution began with a Declaration of the Rights of Man and Citizen. Rights such as the right to life, freedom of speech, freedom of opinion, equality before law, were established as 'natural and inalienable' rights, that is, they belonged to each human being by birth and could not be taken away. It was the duty of the state to protect each citizen's natural rights.

Source B

The revolutionary journalist Jean-Paul Marat commented in his newspaper *L'Ami du peuple* (The friend of the people) on the Constitution drafted by the National Assembly:

'The task of representing the people has been given to the rich … the lot of the poor and oppressed will never be improved by peaceful means alone. Here we have absolute proof of how wealth influences the law. Yet laws will last only as long as the people agree to obey them. And when they have managed to cast off the yoke of the aristocrats, they will do the same to the other owners of wealth.'

Source: An extract from the newspaper *L'Ami du peuple*.

Source C

The Declaration of Rights of Man and Citizen

1. Men are born and remain free and equal in rights.

2. The aim of every political association is the preservation of the natural and inalienable rights of man; these are liberty, property, security and resistance to oppression.

3. The source of all sovereignty resides in the nation; no group or individual may exercise authority that does not come from the people.

4. Liberty consists of the power to do whatever is not injurious to others.

5. The law has the right to forbid only actions that are injurious to society.

6. Law is the expression of the general will. All citizens have the right to participate in its formation, personally or through their representatives. All citizens are equal before it.

7. No man may be accused, arrested or detained, except in cases determined by the law.

11. Every citizen may speak, write and print freely; he must take responsibility for the abuse of such liberty in cases determined by the law.

6 The Revolution and Everyday Life

Can politics change the clothes people wear, the language they speak or the books they read? The years following 1789 in France saw many such changes in the lives of men, women and children. The revolutionary governments took it upon themselves to pass laws that would translate the ideals of liberty and equality into everyday practice.

One important law that came into effect soon after the storming of the Bastille in the summer of 1789 was the abolition of censorship. In the Old Regime all written material and cultural activities – books, newspapers, plays – could be published or performed only after they had been approved by the censors of the king. Now the Declaration of the Rights of Man and Citizen proclaimed freedom of speech and expression to be a natural right. Newspapers, pamphlets, books and printed pictures flooded the towns of France from where they travelled rapidly into the countryside. They all described and discussed the events and changes taking place in France. Freedom of the press also meant that opposing views of events could be expressed. Each side sought to convince the others of its position through the medium of print. Plays, songs and festive processions attracted large numbers of people. This was one way they could grasp and identify with ideas such as liberty or justice that political philosophers wrote about at length in texts which only a handful of educated people could read.

Activity

Describe the picture in your own words. What are the images that the artist has used to communicate the following ideas: greed, equality, justice, takeover by the state of the assets of the church?

Fig.15 – The patriotic fat-reducing press.
This anonymous print of 1790 seeks to make the idea of justice tangible.

AP SCERT

6 புரட்சியும் அன்றாட வாழ்க்கையும்

மக்கள் அணியும், ஆடைகளையும், அவர்கள் பேசும் மொழி அல்லது அவர்கள் படிக்கும் நூல்களையும் அரசியலால் மாற்ற முடியுமா? 1789க்குப் பின் ஆண், பெண் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கையில் இவ்வாறான பல மாற்றங்கள் பிரான்சில் ஏற்பட்டன. சுதந்திரம், சமத்துவம் போன்ற இலட்சியங்களை அன்றாட வாழ்வில் நடைமுறையில் கொண்டு வரும் சட்டங்களை ஏற்றல் தம் கடமை என புரட்சி அரசாங்கங்கள் கருதின.

1789 கோடை காலத்தில் பாஸ்டில் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப்பின் தணிக்கை ஒழிப்பு நடைமுறைக்கு வந்த முக்கியமான சட்டமாகும். பழைய ஆட்சி முறையில் அனைத்து எழுத்து வடிவிலான கூறுகள், கலாச்சார செயற்பாடுகள், நூல்கள், செய்தித்தாள்கள், நாடகங்கள் போன்றவை மன்னரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே வெளியிடப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும். தற்போது மனித, குடியுரிமைகள் அறிவிப்பு பேச்சுரிமை, கருத்தை வெளியிடும் சுதந்திரம் இயற்கை உரிமை என அறிவித்தது. செய்தித்தாள்கள், கைப்பிரதிகள், நூல்கள், அச்சிடப்பட்ட படங்கள் ஆகியவை பிரெஞ்சு நகரமெங்கும் வெள்ளம் போல் திரண்டன. அங்கிருந்து மிக வேகமாக கிராமப்புறங்களுக்கு பயணித்தன. அவை பிரான்சில் நடைபெறும் நிகழ்வுகள் மாற்றங்கள் குறித்து விவரித்தன மற்றும் விவாதித்தன. பத்திரிக்கை சுதந்திரம் என்பது நடைபெற்றுவரும் நிகழ்வுகள் மீது எதிர் கருத்துகளையும் வெளிப்படுத்தும் சுதந்திரம் தரப்பட்டது. எதிர்கட்சிகள் அச்சு ஊடகம் வாயிலாக மக்களிடையே தங்களுடைய இடத்தைப்பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டன. நாடகங்கள், பாடல்கள், திருவிழா ஊர்வலங்கள் பெரும் எண்ணிக்கையில் மக்களைக் கவர்ந்தன.

கல்வியாளர்களாக இருந்த குறைவான மக்களே படிக்கக்கூடிய அரசியல் தத்துவ ஞானிகளின் நூல்களை நீண்டகாலமாக எழுதப்பட்ட சுதந்திரம் அல்லது நீதி போன்ற சிந்தனைகளை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கும் அடையாளம் காண்பதற்கும் இவை முக்கிய வழிமுறைகளாயின.

செயல்

மேலே உள்ள படத்தைப் பற்றி சொந்தக் கருத்தினைக் கூறவும். பேராசை சமத்துவம், நீதி, சர்ச்சின் சொத்துக்களை அரசாங்கம் கையகப்படுத்தி கொள்ளுதல் போன்ற சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்கு ஓவியரால் பயன்படுத்தப்பட்ட படங்கள் யாவை?

படம் 15 கொழுப்பை குறைக்கும் அச்சு ஊடகம் நீதிக்கருத்தினை தெளிவுபடுத்துவதற்கு 1790ன் பெயரிடப்படாத அச்சு

AP SCERT

***Fig.16** - Marat addressing the people. This is a painting by Louis-Leopold Boilly.*
Recall what you have learnt about Marat in this chapter. Describe the scene around him. Account for his great popularity. What kinds of reactions would a painting like this produce among viewers in the Salon?

Conclusion

In 1804, Napoleon Bonaparte crowned himself Emperor of France. He set out to conquer neighbouring European countries, dispossessing dynasties and creating kingdoms where he placed members of his family. Napoleon saw his role as a moderniser of Europe. He introduced many laws such as the protection of private property and a uniform system of weights and measures provided by the decimal system. Initially, many saw Napoleon as a liberator who would bring freedom for the people. But soon the Napoleonic armies came to be viewed everywhere as an invading force. He was finally defeated at Waterloo in 1815. Many of his measures that carried the revolutionary ideas of liberty and modern laws to other parts of Europe had an impact on people long after Napoleon had left.

***Fig.17** – Napoleon crossing the Alps, painting by David.*

The ideas of liberty and democratic rights were the most important legacy of the French Revolution. These spread from France to the rest of Europe during the nineteenth century, where feudal systems

படம் 16 : மாராட் மக்களிடம் உரையாற்றுதல், இது லூயி லியோபோல்ட் பாய்லி வரைந்த ஓவியம். இந்த அத்தியாயத்தில் மாராட் பற்றி நீங்கள் தெரிந்து கொண்டவற்றை நினைவுபடுத்திக்கொள்ளவும். அவரைச் சுற்று உள்ள காட்சியை விவரிக்கவும் சலோனில் உள்ள பார்வையாளர்களிடையே இது போன்ற ஓவியம் எவ்வகையான துலங்கலை வெளிக்கொணர்ந்தது?

முடிவுரை

1804ல் நெப்போலியன் போனபார்ட் தன்னைத் தானே பிரான்சின் பேரரசராக அறிவித்துக்கொண்டார். அவர் அருகிலுள்ள பல ஐரோப்பிய நாடுகளை வெல்வதற்குப் புறப்பட்டார். பல அரசவம்சங்களை அழித்து, கைப்பற்றிய அரசுகளை தன் குடும்ப உறுப்பினர்களின் கட்டுப்பாட்டில் வைத்தார். நெப்போலியன் ஐரோப்பாவை நவீன மயமாக்கினார். தனியார் சொத்து பாதுகாப்பு, தசாம்ச முறையிலான எடைகள், அளவுகளின் சீரான தன்மை போன்ற பல்வேறு சட்டங்களை அறிமுகப்படுத்தினார். தொடக்கத்தில் பெரும்பாலான மக்கள் நெப்போலியனை மக்களுக்கு எனக்கருதினர். ஆனால் நெப்போலியனின் படைகள் ஒவ்வொரிடத்திலும் ஒரு படையெடுக்கும் ஆற்றலாகப் பார்க்கப்பட்டன. இறுதியாக அவர் 1815ல் வாட்டர்லூ என்னும் போரில் தோற்றுவிட்டார். நெப்போலியன் அறிமுகப்படுத்திய புரட்சிகரமான கருத்துகளான சுதந்திரம், நவீன சட்டங்கள் நெப்போலியனுக்குப் பின் நீண்ட காலம் வரை ஐரோப்பாவின் மற்ற பகுதி மக்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தின.

சுதந்திரம், மக்களாட்சி உரிமைகள் ஆகியவை பிரெஞ்சுப் புரட்சி வாயிலாக பரவின. இவை 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா முழுவதும் பரவின. நிலப்பிரபுத்துவ முறை ஒழிக்கப்பட்டது.

படம் 17: ஆல்ப்ஸ் மலையை தாண்டும் நெப்போலியன். இப்படம் டேவிட் என்பவரால் வரையப்பட்டது.

were abolished. Colonised peoples reworked the idea of freedom from bondage into their movements to create a sovereign nation state. Tipu Sultan and Rammohan Roy are two examples of individuals who responded to the ideas coming from revolutionary France.

Box 2

Raja Rammohan Roy was one of those who was inspired by new ideas that were spreading through Europe at that time. The French Revolution and later, the July Revolution excited his imagination.

'He could think and talk of nothing else when he heard of the July Revolution in France in 1830. On his way to England at Cape Town he insisted on visiting frigates (warships) flying the revolutionary tri-colour flag though he had been temporarily lamed by an accident.'

Susobhan Sarkar, *Notes on the Bengal Renaissance* 1946.

Activities

1. Find out more about any one of the revolutionary figures you have read about in this chapter. Write a short biography of this person.
2. The French Revolution saw the rise of newspapers describing the events of each day and week. Collect information and pictures on any one event and write a newspaper article. You could also conduct an imaginary interview with important personages such as Mirabeau, Olympe de Gouges or Robespierre. Work in groups of two or three. Each group could then put up their articles on a board to produce a wallpaper on the French Revolution.

Activities

AP – SCERT

Questions

1. Describe the circumstances leading to the outbreak of revolutionary protest in France.
2. Which groups of French society benefited from the revolution? Which groups were forced to relinquish power? Which sections of society would have been disappointed with the outcome of the revolution?
3. Describe the legacy of the French Revolution for the peoples of the world during the nineteenth and twentieth centuries.
4. Draw up a list of democratic rights we enjoy today whose origins could be traced to the French Revolution.
5. Would you agree with the view that the message of universal rights was beset with contradictions? Explain.
6. How would you explain the rise of Napoleon?
7. Today, many low-income families work as daily-wage labourers, have no land of their own and depend on government welfare schemes. In the old French society, which group is most similar to them?

   a) Clergy of the 1st Estate.

   b) Nobles of the 2nd Estate.

   c) Rich people of the 3rd Estate.

   d) Poor workers of the 3rd Estate.

குடியேற்ற அரசுகளின் மக்கள் தங்கள இயக்கங்கள் வாயிலாக அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் என்னும் கருத்துகளை புனரமைத்து ஓர் இறையாண்மை கொண்ட நாட்டினை உருவாக்கின, திப்பு சுல்தான் ராஜாராம் மோகன்ராய் போன்றோரை பிரெஞ்சுப் புரட்சிக் கருத்துகளுக்கு தங்கள் துலங்கலை வெளிப்படுத்தியவர்கள் என்று கூறலாம்.

கட்டம் 2

பிரெஞ்சுப் புரட்சி காலத்தில் ஐரோப்பாவில் பரவிய புதிய சிந்தனைகளிலிருந்து ஊக்கம் பெற்றவர்களில் ராஜாராம் மோகன்ராய் ஒருவர். பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் நடந்த ஜுலைப் புரட்சி அவருடைய சிந்தனைகளை தூண்டியது. 1830ல் பிரான்சில் ஜுலை புரட்சி பற்றி கேள்வியுற்றபோது, அவரால் எதையும் சிந்திக்க இயலவில்லை. பேச இயலவில்லை. இங்கிலாந்திற்கு செல்லும்போது விபத்திற்குள்ளான போதும் கேப்டவுன் அருகில் மூவண்ணக் கொடியை பறக்கவிட்டு போர்க்கப்பல்களை பார்க்கவேண்டுமென வலியுறுத்தினார்.

செயல்கள்

1. இந்த அத்தியாயத்தில் நீங்கள் கற்றறிந்த புரட்சியாளர்களில் ஒருவரைப் பற்றி விளக்கமாகக் கூறவும். அவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதவும்.
2. பிரெஞ்சுப் புரட்சியில் ஒவ்வொரு நாளும், வாரத்தில் நடைபெறும் நிகழ்வுகளை விவரிக்கும் செய்தித்தாள்கள் அதிகரித்தன.ஏதேனும் ஒரு நிகழ்வைப் பற்றிய தகவல் மற்றும் படங்களை சேகரித்து செய்தித்தாள் கதையை எழுதவும், நீங்கள் மீராப்யூ, ஒலிம்பே டி கௌஜஸ், ராபஸ்பியர் போன்ற முக்கியமான நபர்களுடன் கற்பனையான நேர்காணலும் நடத்தலாம். இரண்டு, மூன்று குழுக்களில் செயல்படவும், ஒவ்வொரு குழுவும் பிரரெஞ்சு புரட்சியின் மீது சுவரொட்டியை தயாரிப்பதற்கு அவர்களின் கதைகளை பலகை மீது வைக்கலாம்.

வினாக்கள்

1. பிரான்சில் புரட்சிகரமான எதிர்ப்புகள் ஏற்படுவதற்கு வழி வகுப்பதற்கு காரணமான சூழ்நிலைகளை விவரிக்கவும்.
2. பிரெஞ்சு சமுதாயத்தின் எந்த சமூகங்கள் புரட்சி மூலம் நன்மை அடைந்தன? எந்த சமூகங்கள் அதிகாரத்தை விட வேண்டியிருந்தது? புரட்சியின் விளைவுகளில் சமுதாயத்தின் எந்த பிரிவுகள் ஏமாற்றம் அடைந்தன?
3. 19ஆம் நூற்றாண்டு, 20ஆம் நூற்றாண்டு மக்களுக்கு பிரெஞ்சு புரட்சி வழங்கிய முக்கியத்துவத்தை விவரி.
4. பிரெஞ்சு புரட்சியின் தோற்றத்திலிருந்து பெறப்பட்ட, தற்போது நாம் அனுபவித்து வரும் மக்களாட்சி உரிமைகளை பட்டியலிடவும்.
5. அனைவருக்கும் பொதுவான உரிமைகள் பற்றிய செய்தி முரண்பாடுகளுடன் கூடியது என்னும் கருத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? விவரிக்கவும்.
6. நெப்போலியனின் எழுச்சியைப் பற்றி விவரிக்கவும்.
7. தற்காலத்தில் குறைந்த ஊதியம் பெறும் தினக்கூலி தொழிலாளர்கள் பலபேருக்கு சொந்தமான நிலம் இருக்காது. மேலும் அவர்கள் அரசின் நலதிட்டங்களின் மீது ஆதாரப்பட்டிருப்பார்கள். பழைய பிரெஞ்சு சமூகத்தில் எந்த குழு இவர்களுக்கு மிகவும் இணையானது.

   a) 1வது எஸ்டேட்டின் மதகுருக்கள் c) 3வது எஸ்டேட்டின் செல்வந்தர்கள்

   b) 2வது எஸ்டேட்டின் உயர்குடிமக்கள் d) 3வது எஸ்டேட்டின் ஏழை தொழிலாளர்கள்

Chapter – 2

Socialism in Europe and the Russian Revolution

D5I4Q4

1 The Age of Social Change

In the previous chapter you read about the powerful ideas of freedom and equality that circulated in Europe after the French Revolution. The French Revolution opened up the possibility of creating a dramatic change in the way in which society was structured. As you have read, before the eighteenth century society was broadly divided into estates and orders and it was the aristocracy and church which controlled economic and social power. Suddenly, after the revolution, it seemed possible to change this. In many parts of the world including Europe and Asia, new ideas about individual rights and who controlled social power began to be discussed. In India, Raja Rammohan Roy and Derozio talked of the significance of the French Revolution, and many others debated the ideas of post-revolutionary Europe. The developments in the colonies, in turn, reshaped these ideas of societal change.

AP SCERT

Not everyone in Europe, however, wanted a complete transformation of society. Responses varied from those who accepted that some change was necessary but wished for a gradual shift, to those who wanted to restructure society radically. Some were 'conservatives', others were 'liberals' or 'radicals'. What did these terms really mean in the context of the time? What separated these strands of politics and what linked them together? We must remember that these terms do not mean the same thing in all contexts or at all times.

We will look briefly at some of the important political traditions of the nineteenth century, and see how they influenced change. Then we will focus on one historical event in which there was an attempt at a radical transformation of society. Through the revolution in Russia, socialism became one of the most significant and powerful ideas to shape society in the twentieth century.

1.1 Liberals, Radicals and Conservatives

One of the groups which looked to change society were the liberals. Liberals wanted a nation which tolerated all religions. We should remember that at this time European states usually discriminated in

பாடம் – 2

ஐரோப்பாவில் சோஷியலிஸம் மற்றும் ரஷ்ய புரட்சி

M8F8L6

1 சமுதாய மாற்றக் காலம்

பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் ஐரோப்பாவின் பரவிய சுதந்திரம், சமத்துவம் போன்ற எண்ணங்களைப் பற்றி கடந்த அத்தியாத்தில் நீங்கள் படித்தீர்கள். சமதாயம் உருவாகும் முறையில் அற்புதமான மாற்றத்தை உருவாக்கும் வாய்ப்பிற்கு பிரெஞ்சுப் புரட்சி வழிகோலியது. பதினெட்டாம் நூற்றாண்டிற்கு முன் சமுதாயம் எஸ்டேட்டுகளாகவும், ஆர்டர்களாகவும் பிரிக்கப்பட்டு பிரபுக்கள் மற்றும் சர்ச்சுகளே பொருளாதார, சமுதாய சக்தியைக் கட்டுப்படுத்தின என்று நீங்கள் படித்தீர்கள். புரட்சிக்குப்பின் உடனடியாக இதை மாற்றுவது சாத்தியமே என்று தோன்றியது. ஐரோப்பா, ஆசியா உள்ளிட்ட உலகின் பல்வேறு பகுதிகளில், தனிப்பட்ட உரிமைகள் பற்றியும் சமுதாய சக்தியைக் கட்டுப்படுத்துபவர்களைப் பற்றிய புதிய கருத்துக்களின் மீது விவாதங்கள் நடந்தன. இந்தியாவில் இராஜாராம் மோகன்ராய் மற்றும் டெரோஜியோ பிரெஞ்சுப் புரட்சியின் முக்கியத்துவத்தை பற்றி தெரிவித்தனர். மேலும் பலர் புரட்சிக்குப் பிந்தைய ஐரோப்பாவின் கருத்துகளைப் பற்றி விவாதித்தனர். குடியேற்ற ஆட்சிப் பகுதிகளில் நடந்த பரிணாமங்கள் இச்சமுதாய மாற்றத்தைச் சேர்ந்த கருத்துகளை மறுவடிவம் பெறச் செய்தன.

ஆனால் ஐரோப்பாவிலுள்ள அனைவரும் சமுதாயம் முழுமையான அளவில் மாற்றமடைய வேண்டுமெனக் கருதவில்லை. சிறிதளவு மாற்றம் வேண்டுமென நினைத்தனர். ஆனால் அது படிப்படியாக நடைபெற வேண்டுமென விரும்புபவர்களிடமிருந்து சமுதாயத்தை முழுமையாக மீண்டும் உருவாக்க நினைப்பவர்கள் வரை சிந்தனை மாறிக்கொண்டே வந்தன. இவர்களில் சிலர் பழமைவாதிகள் மற்றும் சிலர் சுதந்திரவாதிகள் அல்லது முற்போக்குச் சிந்தனையாளர்களாக இருந்தனர். இச்சமயத்தில் உண்மையில் இச்சொற்களின் பொருள் என்ன? எந்த அரசியல் தடைகள் இவற்றை வேறுபடுத்தின? இவற்றை இணைத்து வைத்த கருத்துகள் யாவை? அனைத்து சமயங்களிலும் அல்லது வேலைகளிலும் இச்சொற்களுக்கு இதே பொருள் வரும் என்று நம்மால் கூற இயலாது என்பதை நாம் அறிய வேண்டும்.

நாம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் சில முக்கியமான அரசியல் சம்பிரதாயங்களை சுருக்கமாக ஆய்ந்து அவை மாற்றத்தின் மீது எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தின என்பதை கவனிப்போம். சமுதாயத்தை முழுமையாக மாற்றும் முயற்சி நடைபெற்ற ஒரு வரலாற்று நிகழ்வின் மீது நாம் கவனம் செலுத்துவோம். 20ஆம் நூற்றாண்டின் ரஷ்யாவில் சோஷியலிசக் கருத்துக்களுடன் நடைபெற்ற புரட்சியால் சமுதாயத்தில் மிகவும் ஆற்றல்மிக்க முக்கியமான மாற்றத்திற்கு துணைபுரிந்தது.

1.1. சுதந்திரவாதிகள், முற்போக்குச் சிந்தனையாளர்கள் மற்றும் பழமைவாதிகள்

சமுதாயத்தை மாற்ற வேண்டுமென முயற்சித்த சமூகங்களில் சுதந்திரவாதிகளின் சமூகமும் ஒன்று அனைத்து மதங்களின் மீதும் பொறுமையை கடைபிடிக்கும் நாடு வேண்டுமென சுதந்திரவாதிகள் விரும்பினர். ஆனால் இச்சமயத்தில் ஐரோப்பிய அரசுகள் பொதுவாக

favour of one religion or another (Britain favoured the Church of England, Austria and Spain favoured the Catholic Church). Liberals also opposed the uncontrolled power of dynastic rulers. They wanted to safeguard the rights of individuals against governments. They argued for a representative, elected parliamentary government, subject to laws interpreted by a well-trained judiciary that was independent of rulers and officials. However, they were not 'democrats'. They did not believe in universal adult franchise, that is, the right of every citizen to vote. They felt men of property mainly should have the vote. They also did not want the vote for women.

In contrast, radicals wanted a nation in which government was based on the majority of a country's population. Many supported women's **suffragette** movements. Unlike liberals, they opposed the privileges of great landowners and wealthy factory owners. They were not against the existence of private property but disliked concentration of property in the hands of a few.

Conservatives were opposed to radicals and liberals. After the French Revolution, however, even conservatives had opened their minds to the need for change. Earlier, in the eighteenth century, conservatives had been generally opposed to the idea of change. By the nineteenth century, they accepted that some change was inevitable but believed that the past had to be respected and change had to be brought about through a slow process.

Such differing ideas about societal change clashed during the social and political turmoil that followed the French Revolution. The various attempts at revolution and national transformation in the nineteenth century helped define both the limits and potential of these political tendencies.

AP SCERT

1.2 Industrial Society and Social Change

These political trends were signs of a new time. It was a time of profound social and economic changes. It was a time when new cities came up and new industrialised regions developed, railways expanded and the Industrial Revolution occurred.

Industrialisation brought men, women and children to factories. Work hours were often long and wages were poor. Unemployment was common, particularly during times of low demand for industrial goods. Housing and sanitation were problems since towns were growing rapidly. Liberals and radicals searched for solutions to these issues.

New words

Suffragette movement – A movement to give women the right to vote.

ஒரு மதத்தின் மீது சாதகமாக இருந்து பிற மதங்களை வேறுவிதமாக பார்ப்பவர்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும் (பிரிட்டன் இங்கிலாந்தின் சர்ச்சுக்கும், ஆஸ்திரியா, ஸ்பெயின் நாடுகள் கத்தோலிக்க சர்ச்சுக்கும் சாதகமாக இருந்தன) சுதந்திரவாதிகளும் அரச வம்ச ஆட்சியாளர்களின் கட்டுப்பாடற்ற அதிகாரத்தை எதிர்த்தனர். அரசாங்கங்களுக்கு எதிராக மனித உரிமைகளை காக்க வேண்டுமென அவர்கள் விரும்பினர். அவர்கள் பிரதிநிதித்துவ அடிப்படையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற அரசாங்கம் தேவை என்று கோரினர். இப்பாராளுமன்றம் இயற்றிய சட்டங்களை விளக்கக்கூடிய நன்கு பயிற்சி பெற்ற நீதித்துறை இருக்க வேண்டுமெனவும் இது ஆட்சியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கீழ்ப்படியாத சுதந்திர அமைப்பாக இருக்க வேண்டுமென வாதாடினர். ஆனால் அவர்கள் மக்களாட்சி கொள்கையாளர்கள் அல்ல. ஒவ்வொரு குடிமகனுக்கும் வாக்குரிமை இருக்க வேண்டுமென்னும் பொதுவான வயது வந்தோர் வாக்குரிமை கருத்தின் மீது அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. செல்வந்தர்களாக ஆண்களுக்கு மட்டும் வாக்குரிமை இருக்க வேண்டுமென்று கருதினர். பெண்களுக்கு வாக்குரிமை இருக்கவேண்டுமென்று அவர்கள் கருதவில்லை.

இதற்கு மாறாக அதிக மக்கள் விரும்பும் அரசாங்கம் உள்ள நாடு வேண்டுமென முற்போக்குவாதிகள் கோரினர். பலர் பெண்களின் வாக்குரிமை இயக்கங்களுக்கு ஆதரவு தெரிவித்தனர். சுதந்திரவாதிகள் போலன்றி அவர்கள் பெரிய நிலச்சுவாந்தார்கள். செல்வமிக்க தொழிற்பட்டறை உரிமையாளர்களின் அதிகாரங்களை எதிர்த்தனர். அவர்கள் தனியார் சொத்துகள் வைத்திருப்பதற்கு எதிர்க்கவில்லை. ஆனால் சிலர் கைகளில் சொத்து குவிந்திருப்பதை விரும்பவில்லை.

பழமைவாதிகள், முற்போக்குவாதிகள், மற்றும் சுதந்திரவாதிகளை எதிர்த்தனர். ஆனால் பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின்னர் பழமைவாதிகளும் மாற்றத்தின் அவசியத்தைப் புரிந்துகொண்டனர். முதலாவதாக பதினெட்டாம் நூற்றாண்டில் பழமைவாதிகள் மாற்றம் என்னும் சிந்தனையை எதிர்த்தனர். பத்தொன்பதாம் நுற்றாண்டிற்குள் சிறிதளவு மாற்றம் தவிர்க்க முடியாது என்பதை ஏற்றுக்கொண்டனர். ஆனால் கடந்த காலத்தை மதிக்க வேண்டுமென்றும் மாற்றச் செயல்முறையை மெதுவாக கொண்டுவரவேண்டுமென நம்பினர். பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் ஏற்பட்ட சமூக, அரசியல் கொந்தளிப்புகளில் மாற்றத்தைப் பற்றிய சிந்தனைகள் முரண்பாடுகளுக்குட்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் புரட்சி, தேசிய மாற்றத்திற்காக செய்த பல்வேறு முயற்சிகள் இவ்வரசியல் போக்குகளின் வரம்புகள், திறன்கள் இரண்டையும் விளக்குவதில் துணைபுரிந்தன.

1.2. தொழிற் சமுதாயம், சமுதாய மாற்றம்

இவ்வரசியல் போக்குகள் மாறில காலத்திற்கு அடையாளமாக நின்றன. இது தீவிரமான சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஆளான காலம் இக்காலத்தில் புதிய நகரங்கள் ஏற்பட்டு புதிய தொழிற்பகுதிகள் வளர்ச்சியடைந்து, இரயில் மார்கங்கள் (இரயில்வேக்கள்) விரிவடைந்தன. தொழிற்புரட்சி நடைபெற்றது.

தொழில்மயமாக்கல் ஆண்கள், பெண்கள், குழந்தைகளை பணிமனைகளுக்கு கொண்டு சென்றது. அடிக்கடி பணிவேளைகள் அதிகரிக்கப்பட்டு ஊதியங்கள் குறைவாக இருந்தன. குறைவாக இருந்த காலத்தில் வேலையின்மை சாதாரணமானதாக இருந்தது. நகரங்கள் வேகமாக வளர்ச்சியடைந்து வந்ததால் வீடுகட்டுதல், சுகாதாரம் ஆகியவை பிரச்சினைகளாக மாறின. சுதந்திரவாதிகள் மற்றும் முற்போக்குவாதிகள் இப்பிரச்சினைகளின் தீர்வுக்காக முயற்சி செய்தனர்.

புதிய சொற்கள்

வாக்குரிமை இயக்கம் – பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் போராட்டம்

Fig. 1 – The London poor in the mid-nineteenth century as seen by a contemporary.
From: Henry Mayhew, London Labour and the London Poor, *1861.*

Almost all industries were the property of individuals. Liberals and radicals themselves were often property owners and employers. Having made their wealth through trade or industrial ventures, they felt that such effort should be encouraged – that its benefits would be achieved if the workforce in the economy was healthy and citizens were educated. Opposed to the privileges the old aristocracy had by birth, they firmly believed in the value of individual effort, labour and enterprise. If freedom of individuals was ensured, if the poor could labour, and those with capital could operate without restraint, they believed that societies would develop. Many working men and women who wanted changes in the world rallied around liberal and radical groups and parties in the early nineteenth century.

Some nationalists, liberals and radicals wanted revolutions to put an end to the kind of governments established in Europe in 1815. In France, Italy, Germany and Russia, they became revolutionaries and worked to overthrow existing monarchs. Nationalists talked of revolutions that would create 'nations' where all citizens would have

படம் 1–பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் சமகாலத்தவர்கள் கண்ட லண்டன் ஏழைகள் ஆதாரம் : ஹென்றி மேஹ்யூ, லண்டன் உழைப்பாளர் மற்றும் லண்டன் ஏழை 1861

ஏறக்குறைய அனைத்து தொழிற்சாலைகளும் தனிநபர் சொத்துகளாக இருந்தன. சுதந்திரவாதிகளும், முற்போக்குவாதிகளும் தொடர்ந்து சொத்து உரிமையாளர் களாகவும், வேலைவாய்ப்பு தருபவர்களாகவும் இருந்தனர். வாணிகம் அல்லது தொழில் நிறுவனங்கள் வாயிலாக சொத்து சேர்க்கும் முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டுமென அவர்கள் கருதினர். பொருளாதார அமைப்பில் உழைப்பாற்றல் ஆரோக்கியமாக இருந்து குடிமக்கள் கல்வியாளர்களாக இருந்தால் அதன் நன்மைகளை அடையலாம். பிறப்பின் வாயிலாக உயர் வகுப்பினருக்கு வந்த வாரிசுரிமை அதிகாரங்களை எதிர்த்து அவர்கள் சுயமாக பாடுபடுதல் உழைப்பு மற்றும் அமைப்பு நிர்வாகத்தின் மதிப்பில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தனர். தனி நபர்களின் சுதந்திரத்திற்கு உறுதியளித்து, ஏழைகள் உழைத்தால், செல்வந்தர்கள் தடையின்றி நிறுவனங்களை நிர்வகித்தால் சமுதாயங்கள் முன்னேற்றமடையும் என்று அவர்கள் நம்பினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகில் மாற்றங்களை விரும்புவோர் பலர் தொழிலக பெண்கள் ஆண்கள், சுதந்திரவாத, முற்போக்கு சமூகத்தினர், கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

சில தேசியவாதிகள், சுதந்திரவாதிகள், முற்போக்குவாதிகள் ஐரோப்பாவின் அரசாங்கங்களை நீக்குவதற்கு 1815 போன்ற புரட்சி ஏற்பட வேண்டுமென்று கோரினர். பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளில் உள்ளவர்கள் புரட்சியாளர்களாக மாறி அப்போதிருந்த பேரரசர்களை பதவி நீக்கம் செய்வதற்கு பாடுபட்டனர். குடிமக்கள் அனைவருக்கும் சமமான உரிமைகள் வழங்கக்கூடிய இனத்தவரை ஏற்படுத்தும் புரட்சியைப் பற்றி தேசியவாதிகள் பேசினர்.

equal rights. After 1815, Giuseppe Mazzini, an Italian nationalist, conspired with others to achieve this in Italy. Nationalists elsewhere – including India – read his writings.

1.3 The Coming of Socialism to Europe

Perhaps one of the most far-reaching visions of how society should be structured was socialism. By the mid - nineteenth century in Europe, socialism was a well-known body of ideas that attracted widespread attention.

Socialists were against private property, and saw it as the root of all social ills of the time. Why? Individuals owned the property that gave employment but the propertied were concerned only with personal gain and not with the welfare of those who made the property productive. So if society as a whole rather than single individuals controlled property, more attention would be paid to collective social interests. Socialists wanted this change and campaigned for it.

How could a society without property operate? What would be the basis of socialist society?

Socialists had different visions of the future. Some believed in the idea of cooperatives. Robert Owen (1771-1858), a leading English manufacturer, sought to build a cooperative community called New Harmony in Indiana (USA). Other socialists felt that cooperatives could not be built on a wide scale only through individual initiative: they demanded that *governments* encourage cooperatives. In France, for instance, Louis Blanc (1813-1882) wanted the government to encourage cooperatives and replace capitalist enterprises. These cooperatives were to be associations of people who produced goods together and divided the profits according to the work done by members.

Karl Marx (1818-1883) and Friedrich Engels (1820-1895) added other ideas to this body of arguments. Marx argued that industrial society was 'capitalist'. Capitalists owned the capital invested in factories, and the profit of capitalists was produced by workers. The conditions of workers could not improve as long as this profit was accumulated by private capitalists. Workers had to overthrow capitalism and the rule of private property. Marx believed that to free themselves from capitalist exploitation, workers had to construct a radically socialist society where all property was socially controlled. This would be a communist society. He was convinced that workers would triumph in their conflict with capitalists. A communist society was the natural society of the future.

Activity

List two differences between the capitalist and socialist ideas of private property.

AP SCERT

1815க்குப் பிறகு இத்தாலியின் தேசியவாதியான ஜோசப் மாஜினி இத்தாலியில் இதனை அடைவதற்கு மற்றவர்களுடன் இணைந்து இரகசிய திட்டங்களை வடிவமைத்தார். இந்தியா உள்ளிட்ட பிற இடங்களின் தேசியவாதிகள் அவருடைய படைப்புகளை படித்தனர்.

1.3 ஐரோப்பாவிற்கு சோஷியலிஸத்தின் வருகை

சமுதாய அமைப்பு எவ்வாறு நடைபெற வேண்டும் என்னும் மிகவும் தொலைநோக்குப் பார்வை கொண்ட தோற்றங்களில் ஒன்று சோஷலிஸம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இடைக்காலத்திற்கு ஐரோப்பாவில் சோஷலிஸம் பரவலாக கவனத்தை ஈர்த்த ஒரு புகழ்மிக்க சிந்தனையாக இருந்தது.

சோஷலிஸவாதிகள் தனிநபர் சொத்துகளுக்கு எதிரானவர்கள். அக்காலத்தின் அனைத்து சமுதாய இன்னல்களுக்கும் தனியார் சொத்துகளே காரணம் என்று கருதினர். ஏன்? சுயமாக சொத்து இருந்த நபர்கள் வேலைவாய்ப்பினை வழங்கினர். செல்வந்தர்கள் தனிநபர் லாபம் குறித்து மட்டுமே கவனம் செலுத்தி அந்த சொத்து உற்பத்தி செய்தவர்களின் நலனைக் குறித்து சிந்திக்கவில்லை. எனவே ஒரு நபர் இல்லாமல் சமுதாயம் முழுவதுமாக சொத்தினை கட்டுப்படுத்தினால் சமூக, சமுதாய நன்மைகளின் மீது அதிக கவனம் செலுத்தலாம். சோஷியலிஸவாதிகள் இவ்வகையான மாற்றத்தை வேண்டி அதற்காக பிரச்சாரம் செய்தனர்.

சொத்து இல்லாத சமுதாயம் எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது.? சோஷியலிஸ சமுதாயத்திற்கு அடிப்படை என்ன?

எதிர்காலத்தைப் பற்றி சோஷியலிஸவாதிகளுக்கு வேறுபட்ட கருத்துகள் இருந்தன. சிலர் கூட்டுறவு எண்ணங்களில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இராபர்ட் ஓவன் (1771-1858), என்னும் பிரபல ஆங்கிலேய உற்பத்தியாளர் இந்தியாவில் (USA) நியூ ஹார்மனி என்னும் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவ வேண்டுமென விரும்பினார். தனிநபர் முயற்சியால் பரந்த அளவல் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்க முடியாது என்று சோஷியலிஸவாதிகள் கருதினர். அரசாங்கங்கள் கூட்டுறவு சங்கங்களை ஊக்கப்படுத்த வேண்டுமென கருதினர்.

எடுத்துக்காட்டாக பிரான்சில் லூயி பிளாங்க் (1813-1882) முதலீட்டாளர்களின் வியாபாரங்களுக்கு பதிலாக அரசாங்கம் கூட்டுறவு சங்கங்களை ஊக்கப்படுத்த வேண்டுமென கருதினார். தனிநபர்கள் சங்கங்களாக ஏற்பட்டு கூட்டுறவு சங்கங்களின் பொருள் உற்பத்தியைச் செய்து ஈட்டிய இலாபங்களை அவர்கள் செய்த வேலையைப் பொறுத்து பகிர்ந்து கொள்ள வேண்டும்.

காரல் மார்க்ஸ் (1818-1883), பிரிடெரிக் எங்கெல்ஸ் (1820-1895) இவ்விவாதங்களுடன் பிற கருத்துகளை இணைத்தனர். தொழில் சமுதாயம் முதலீட்டாளர் சமுதாயம் என்று மார்க்ஸ் கூறினார். முதலீட்டாளர்கள் தங்களுடைய முதலீடுகளை தொழிற்சாலைகளில் செலுத்தினர். முதலீட்டாளர்களுக்கு இலாபம் உழைப்பாளர்களின் உழைப்பால் கிடைக்கிறது. இந்த இலாபத்தை தனியார் முதலீட்டாளர்கள் திரட்டிக்கொள்ளும் காலம் வரை உழைப்பாளர்களின் சூழ்நிலைகள் மேம்படாது. உழைப்பாளர்கள் முதலீட்டு முறையையும், தனியார் சொத்து ஆட்சியையும் வீழ்த்த வேண்டும். முதலீட்டாளர்களின் சுரண்டுதலில் இருந்து விடுதலை பெற வேண்டுமெனில் சொத்துகளின் மீது சமுதாயக் கட்டுப்பாடு உள்ள பொதுவுடைமைச் சமுதாயத்தை உழைப்பாளர்கள் உருவாக்க வேண்டும் என்று காரல்மார்க்ஸ் நம்பினார். இது ஒரு கம்யூனிஸ (பொதுவுடைமை) சமுதாயமாக இருக்கும். முதலீட்டாளர்களுடன் தங்களுடைய போராட்டத்தில் உழைப்பாளர்கள் வெற்றியடைவர் என்று அவர் நம்பினார். எதிர்காலத்தில் கம்யூனிஸ சமுதாயம் இயற்கையான சமுதாயமாக இருக்கும்.

செயல்

தனியார் சொத்து தொடர்பான முதலீட்டாளர், சோஷியலிஸவாத சிந்தனைகளுக்கிடையே இரண்டு வேறுபாடுகளை எதுவும்.

1.4 Support for Socialism

By the 1870s, socialist ideas spread through Europe. To coordinate their efforts, socialists formed an international body – namely, the Second International.

Workers in England and Germany began forming associations to fight for better living and working conditions. They set up funds to help members in times of distress and demanded a reduction of working hours and the right to vote. In Germany, these associations worked closely with the Social Democratic Party (SPD) and helped it win parliamentary seats. By 1905, socialists and trade unionists formed a Labour Party in Britain and a Socialist Party in France. However, till 1914, socialists never succeeded in forming a government in Europe. Represented by strong figures in parliamentary politics, their ideas did shape legislation, but governments continued to be run by conservatives, liberals and radicals.

Activity

Imagine that a meeting has been called in your area to discuss the socialist idea of doing away with private property and introducing collective ownership. Write the speech you would make at the meeting if you are:

- a poor labourer working in the fields
- a medium-level landowner
- a house owner

***Fig. 2** – This is a painting of the Paris Commune of 1871 (From Illustrated London News, 1871). It portrays a scene from the popular uprising in Paris between March and May 1871. This was a period when the town council* (commune) *of Paris was taken over by a 'peoples' government' consisting of workers, ordinary people, professionals, political activists and others. The uprising emerged against a background of growing discontent against the policies of the French state. The 'Paris Commune' was ultimately crushed by government troops but it was celebrated by Socialists the world over as a prelude to a socialist revolution. The Paris Commune is also popularly remembered for two important legacies: one, for its association with the workers' red flag – that was the flag adopted by the communards (revolutionaries) in Paris; two, for the 'Marseillaise', originally written as a war song in 1792, it became a symbol of the Commune and of the struggle for liberty.*

1.4. சோஷியலிஸத்திற்கு ஆதரவு :

1870க்குள் சோஷியலிஸ சிந்தனைகள் ஐரோப்பா முழுவதும் பரவின. அவர்களின் முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கு சோஷியலிஸவாதிகள் இரண்டாம் இண்டர் நேஷனல் என்னும் பெயருடன் ஒரு சர்வதேச அமைப்பை ஏற்படுத்தினர்.

இங்கிலாந்து, ஜெர்மனி நாடுகளின் உழைப்பாளர்கள் சிறந்த வாழ்க்கை மற்றும் வேலை சூழ்நிலைகளுக்காக போராடுவதற்கு சங்கங்களை ஏற்படுத்திக் கொள்ளத்தொடங்கினர். துயரமான சமயங்களில் உறுப்பினர்களுக்கு உதவுவதற்காக அவர்கள் நிதிகள் திரட்டினர். வேலை நேரங்களை குறைக்க வேண்டுமென்றும் வாக்குரிமை வேண்டுமெனவும் அவர்கள் கோரினர். ஜெர்மனியில் இச்சங்கங்கள் சோஷியல்டெமாக்ரடிக் கட்சி (SPD) யுடன் நெருக்கமாக பணியாற்றி அக்கட்சி பாராளுமன்ற இடங்களை வெல்வதற்கு துணைபுரிந்தது. 1905 க்கு சோஷியலிஸவாதிகள், வணிக சங்க உறுப்பினர்கள் பிரிட்டனில் சோஷியலிஸக் கட்சியையும் ஏற்படுத்தினர். ஆனால் 1914 வரை சோஷியலிஸவாதிகள் ஐரோப்பாவில் அரசாங்கத்தை ஏற்படுத்துவதில் எப்போதும் வெற்றியடையவில்லை. பாராளுமன்ற அரசியலில் அதிக அளவு எண்ணிக்கை பெரும்பான்மை கொண்டிருந்து அவர்களின் சிந்தனைகள் சட்ட வடிவம் பெற்றபோதிலும் அரசாங்கள் மட்டும் பழமைவாதிகள், சுதந்திரவாதிகள் மற்றும் முற்போக்குவாதிகளால் நடத்தப்பட்டன.

செயல்

தனியார் சொத்தினை நீக்கி சமூக உரிமையை அறிமுகப்படுத்தும் சோஷியலிஸ சிந்தனையைப் பற்றி கலந்துரையாடு வதற்கு உங்கள் பகுதியில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தனர் என்று ஊகிக்கவும். நீங்கள் இக்கீழ்ண்டவர்களில் ஒருவராக இருந்தால் கூட்டத்தில் செய்யும் உரையை எழுதவும்.

- நிலங்களில் வேலை செய்யும் ஏழை கூலியாள்.
- இடைநிலை நில உரிமையாளர்
- வீட்டு உரிமையாளர்

படம் 2- இது 1871 பாரிஸ் கம்யூனின் ஓவியம் : (லண்டன் நியூஸ் 1871ல் வரையப்பட்டது) இது 1871 மார்ச், மே இடைக்காலத்தில் பாரிசில் நடைபெற்ற மக்கள் கலகத்திலிருந்து ஒரு காட்சியை வரைந்த காட்டப்பட்டுள்ளது. இது பாரிஸ் டௌன் கவுன்சில் (கம்யூன்) உழைப்பாளர்கள் பொதுமக்கள், நிபுணர்கள், அரசியல் செயல்வீரர்கள், மற்றவர்களுடன் கூடிய மக்களின் அரசாங்கம் கைப்பற்றிய காலம். பிரெஞ்ச அரசுக் கொள்கைகளுக்கு எதிராக அதிகரித்துவரும் அதிருப்தி பின்னணியில் இக்கலகம் எற்பட்டது. இறுதியாக பாரிஸ் கம்யூணை அரசாங்கம் துருப்புக்கள் ஒடுக்கிவிட்டனர். ஆனால் உலகம் முழுவதும் இருந்த சோஷலிஸவாதிகள் இதனை சமூகப் புரட்சிக்கு முற்செயல் என்று கருதி கொண்டாடி மகிழ்கின்றனர். பாரிஸ் கம்யூன் இரண்டு முக்கியமான சிறப்புகளுக்கு புகழ்பெற்றது. முதலாவது, உழைப்பாளர்களின் வெள்ளைக் கொடியுடன் அதற்கு உள்ள தொடர்பு பாரிசின் கம்யூனிஸ்டுகள் (புரட்சியாளர்கள்) இக்கொடிகளை ஏற்றுக்கொண்டனர். இரண்டாவது 'மார்சலைசே' முதலில் 1972ல் போர் கீதமாக இயற்றப்பட்டது. அது கம்யூனிற்கும், விடுதலைப் போராட்டத்திற்கம் சின்னமாக மாறியது.

2 The Russian Revolution

In one of the least industrialised of European states this situation was reversed. Socialists took over the government in Russia through the October Revolution of 1917. The fall of monarchy in February 1917 and the events of October are normally called the Russian Revolution.

How did this come about? What were the social and political conditions in Russia when the revolution occurred? To answer these questions, let us look at Russia a few years before the revolution.

Fig.3** – **Tsar Nicholas II in the White Hall of the Winter Palace, St Petersburg, 1900.
Painted by Earnest Lipgart (1847-1932)

2.1 The Russian Empire in 1914

In 1914, Tsar Nicholas II ruled Russia and its empire. Besides the territory around Moscow, the Russian empire included current-day Finland, Latvia, Lithuania, Estonia, parts of Poland, Ukraine and Belarus. It stretched to the Pacific and comprised today's Central Asian states, as well as Georgia, Armenia and Azerbaijan. The majority religion was Russian Orthodox Christianity – which had grown out of the Greek Orthodox Church – but the empire also included Catholics, Protestants, Muslims and Buddhists.

Fig.4** – **Europe in 1914.
The map shows the Russian empire and the European countries at war during the First World War.

ஐரோப்பாவின் மிகக்குறைந்த தொழில்மயமடைந்த அரசுகளின் சூழ்நிலை தாறுமாறானது. 1917 அக்டோபர் புரட்சி வாயிலாக சோஷியலிஸவாதிகள் ரஷ்யாவில் அரசாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். பிப்ரவரி 1917ல் முடியாட்சி வீழ்ச்சி, அக்டோபரில் நடந்த நிகழ்வுகளை பொதுவாக ரஷ்யப் புரட்சி என்பர்.

இது எவ்வாறு நடந்தது? புரட்சி தோன்றியபோது ரஷ்யாவில் இருந்த சமூக அரசியல் சூழ்நிலைகள் என்ன? இவ்வினாக்களுக்கு விடையளிப்பதற்காக, புரட்சிக்கு சில ஆண்டுகளுக்கு முன் ரஷ்யாவைப் பற்றி பார்ப்போம்.

படம் 3 : 1900 ல் செயிண்ட் பீட்டர்ஸ் பர்க்கின் குளிர்கால அரண்மனையின் வெள்ளை வளாகத்தில் இரண்டாம் ஜார் நிக்கோலஸ் இதனை எர்னல்ட் லிப்கார்ட் (1847-1932) என்பவர் வரைந்தார்.

2.1 1914 ல் ரஷ்யப் பேரரசு

1914ல் ரஷ்யாவையும் அதன் பேரரசையும் இரண்டாம் சார் நிக்கோலஸ்ஆண்டார். மாஸ்கோவைச் சுற்றியுள்ள நிலபாகத்துடன் சேர்த்து ரஷ்யா பேரரசில் தற்போது அடங்கியுள்ள பின்லாந்து, லாட்வியா, லிதுவேனியா, எஸ்டோனியா, போலந்தின் சிறுபகுதி, உக்ரைன், பெலாரஸ் போன்ற பகுதிகள் இருந்தன. இது பசுபிக் வரை பரவிலியிருந்தது. இன்றைய மத்திய ஆசியா உள்ளிட்ட ஜார்ஜியா, அர்மேனியா, அசர்பைசான் போன்ற பகுதிகள் இருந்தன. ரஷ்யாவின் புனித கிறிஸ்த்தவம் (Orthodox Christianity) பெரும்பான்மையான மதமாக இருந்தது. இது கிரேக்க புனித சர்ச்சிலிருந்து தோன்றியது. ஆனால் பேரரசில் கத்தோலிக்கர்கள், பிராடெஸ்டெண்டுகள், முஸ்லீம்கள், புத்த மத்தினரும் இருந்தனர்.

படம் 4 : 1914ல் ஐரோப்பா
இப்படம் முதல் உலகப்போரின் போது ரஷ்யப் பேரரசில் போரில் பங்குகொண்ட நாடுகளை குறிப்பிடுகிறது.

2.2 Economy and Society

At the beginning of the twentieth century, the vast majority of Russia's people were agriculturists. About 85 per cent of the Russian empire's population earned their living from agriculture. This proportion was higher than in most European countries. For instance, in France and Germany the proportion was between 40 per cent and 50 per cent. In the empire, cultivators produced for the market as well as for their own needs and Russia was a major exporter of grain.

Industry was found in pockets. Prominent industrial areas were St Petersburg and Moscow. Craftsmen undertook much of the production, but large factories existed alongside craft workshops. Many factories were set up in the 1890s, when Russia's railway network was extended, and foreign investment in industry increased. Coal production doubled and iron and steel output quadrupled. By the 1900s, in some areas factory workers and craftsmen were almost equal in number.

Fig.5 – Unemployed peasants in pre-war St Petersburg.
Many survived by eating at charitable kitchens and living in poorhouses.

Most industry was the private property of industrialists. Government supervised large factories to ensure minimum wages and limited hours of work. But factory inspectors could not prevent rules being broken. In craft units and small workshops, the working day was sometimes 15 hours, compared with 10 or 12 hours in factories. Accommodation varied from rooms to dormitories.

Fig.6 – Workers sleeping in bunkers in a dormitory in pre-revolutionary Russia.
They slept in shifts and could not keep their families with them.

Workers were a divided social group. Some had strong links with the villages from which they came. Others had settled in cities permanently. Workers were divided by skill. A metalworker of St. Petersburg recalled, 'Metalworkers considered themselves aristocrats among other workers. Their occupations demanded more training and skill . . . ' Women made up 31 per cent of the factory labour force by 1914, but they were paid less than men (between half and three-quarters of a man's wage). Divisions among workers showed themselves in dress and manners too. Some workers formed associations to help members in times of unemployment or financial hardship but such associations were few.

Despite divisions, workers did unite to strike work (stop work) when they disagreed with employers about dismissals or work conditions. These strikes took place frequently in the textile industry during 1896-1897, and in the metal industry during 1902.

In the countryside, peasants cultivated most of the land. But the nobility, the crown and the Orthodox Church owned large properties. Like workers, peasants too were divided. They were also

AP SCERT

2.2 பொருளாதார அமைப்பும் சமுதாயமும்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரஷ்யாவின் அதிக சதவீத மக்கள் விவசாயிகளாக இருந்தனர். ரஷ்யப் பேரரசின் மக்கள் தொகையில் சுமார் 85 சதவீதம் மக்கள் விவசாயத்தின் வாயிலாக வாழ்வாதாரம் பெற்றனர். இவ்விகிதமானது பல ஐரோப்பிய நாடுகளை விட அதிகம். எடுத்துக்காட்டாக பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி நாடுகளில் இவ்விகிதம் 40 சதவீதத்திலிருந்து 50க்கு இடையே இருந்தது. பேரரசின் சாகுபடியாளர்கள் விற்பனைக்காகவும் அவர்களின் சுய தேவைகளுக்காகவும் உற்பத்தி செய்தனர். ரஷ்யா பெரும்பாலும் தானிய ஏற்றுமதியாளராக இருந்தது.

தொழிற்சாலைகள் சில பகுதிகளில் மட்டுமே ஏற்படுத்தப்பட்டன. செயிண்ட் பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ ஆகியவை முதன்மையான தொழில்மையங்களாக இருந்தன. உற்பத்திப் பணியாளர்கள் அதிக அளவில் உற்பத்தியை மேற்கொண்டனர். ஆனால் கைவினைப் பணிமனைகளுடன் பெரிய தொழிற்பட்டறைகளும் இருந்தன. 1890களில் ரஷ்யாவில் இரயில் மார்க்கங்கள் அதிகரித்தபோது பல்வேறு தொழிற்பட்டறைகள் நிறுவப்பட்டன. தொழிலகங்களில் அயல்நாட்டு முதலீடு அதிகரித்தது. நிலக்கரி உற்பத்தி இரட்டிப்பானது. இரும்பு எஃகு உற்பத்தி நான்கு மடங்கு அதிகரித்தது. 1900களுக்குள் சில பகுதிகளில் தொழிலக உழைப்பாளர்கள், கைவினைப் பணியாளர்கள் ஏறக்குறை சமஅளவில் இருந்தனர்.

படம் 5 போருக்கு முன் செயிண்ட் பிட்டர்ஸ் பர்க்கில் வேலையில்லா விவசாயிகள்.

பெரும்பாலான தொழிற்சாலைகள் தொழில் வல்லுநர்களின் தனியார் சொத்தாக இருந்தன. பெரிய தொழிற்பட்டறைகளில் குறைந்தபட்ச ஊதியம், வரம்பிற்குட்பட்ட பணிநேரங்கள் உள்ளவாறு அரசாங்கம் மேற்பார்வையிட்டது.

ஆனால் தொழிற்பட்டறை மேற்பார்வையாளர்களால் விதிமுறைகளை மீறுவதை தடுக்க இயலவில்லை. தொழிற்பட்டறைகளில் பணி நேரங்கள் 10 அல்லது 12 மணிகள் உடன் ஒப்பிட்டால் கைவினை பணிமனைகளிலும் சிறு பணிமனைகளிலும் சில சமயங்களில் 15 மணிகள் பணிநேரங்கள் இருந்தன. வசதிகள் அறைகளிலும் மோசமான பல படுக்கைகள் கொண்ட அறைகளிலும் செய்துதரப்பட்டன.

உழைப்பாளர்கள் ஒரு பிவினைக்குட்பட்ட சமுதாய சமூகமாக இருந்தனர். சிலரும் தாம் வந்த கிராமங்களுடன் நெருங்கிய தொடர்புகள் இருந்தன. மேலும் சிலர் நகரங்களில் நிலையான குடியிருப்புகளை அமைத்துக்கொண்டனர். உழைப்பாளர்களை திறமை அடிப்படையில் பிரித்தனர். செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கில் ஒரு உலோகத் தொழிலாளி இவ்வாறு தன்னை அடையாளப் படுத்திக்கொண்டார். உலோக தொழிலாளர்கள் பிற தொழிலாளர்களுடன் தங்களைத் தாங்களே உயர்ந்தவர்களாக கருதிக்கொண்டனர். அவர்களின் தொழிலாளர்களுடன் தங்களைத் தாங்கே உயர்ந்தவர்களாக கருதிக்கொண்டனர். அவர்களின் தொழில்களுக்கு அதிக பயிற்சி, திறன் தேவைப்படுகிறது. 1914க்குள் தொழிற்பட்டறை உழைப்பாளர் சக்தியில் 31 சதவீதம்பேர் பெண்கள் இருந்தனர். ஆனால் அவர்களுக்கு ஆண்களைவிட குறைவான ஊதியம் வழங்கப்பட்டது. (ஆண்களின் ஊதியத்தில் நான்கில் மூன்று பங்கு) தொழிலாளர்களுக்கிடையேயான பிரிவினைகளுக்கேற்ப அவர்களின் ஆடைகள் நடத்தை முறைகள் இருந்தன. ஆடைகள், மரியாதைகளிலும் தொழிலாளர்களிடையே பிரிவினைகளைக் காட்டினர். வேலையின்மை அல்லது பொளாதார இன்னல்களின்போது உறுப்பினர்களுக்கு உதவிட சில தொழிலாளர்கள் சங்கங்களை ஏற்படுத்தினர். ஆனால் அதுபோன்ற சங்கங்கள் குறைவாகவே இருந்தன.

படம் 6 புரட்சிக்கு முன் ரஷ்யாவில் ஒரு பல்படுக்கை அறையின் பதுங்கு அறைகளில் உறங்கும் தொழிலாளர்கள் அவர்கள் தங்கள் முறைகளில் (shift) படுத்துக்கொண்டனர். அவர்களுடைய குடும்பத்தினரை தங்களுடன் வைத்திருக்க இயலாது.

தங்களிடையே வேற்றுமைகள் இருந்தபோதிலும் பணிநீக்கம், பணிச்சூழல்கள் பற்றி உரிமையாளர்களுடன் வேறுபட்டு வேலை நிறுத்தம் செய்வதற்கு தொழிலாளர்கள் ஒன்றுபட்டனர். இவ்வேலை நிறுத்தங்கள் 1896-1897ல் ஆடை தொழிற்சாலையிலும் 1902ல் உலோகத் தொழிற்சாலைகளிலும் அடிக்கடி நடந்தன. கிராமப் பகுதிகளில் பெரும்பாலான நிலங்களை விவசாயிகள் சாகுபடி செய்தனர். ஆனால் செல்வந்தர்கள், மன்னர்கள், புனித சர்ச்களுக்கு பேரளவில் சொத்துகள் இருந்தன. தொழிலாளர்களைப் போன்றே விவசாயிகளும் பிரிவினைக்குட்பட்டன.

deeply religious. But except in a few cases they had no respect for the nobility. Nobles got their power and position through their services to the Tsar, not through local popularity. This was unlike France where, during the French Revolution in Brittany, peasants respected nobles and fought for them. In Russia, peasants wanted the land of the nobles to be given to them. Frequently, they refused to pay rent and even murdered landlords. In 1902, this occurred on a large scale in south Russia. And in 1905, such incidents took place all over Russia.

Russian peasants were different from other European peasants in another way. They pooled their land together periodically and their commune (*mir*) divided it according to the needs of individual families.

2.3 Socialism in Russia

All political parties were illegal in Russia before 1914. The Russian Social Democratic Workers Party was founded in 1898 by socialists who respected Marx's ideas. However, because of government policing, it had to operate as an illegal organisation. It set up a newspaper, mobilised workers and organised strikes.

